சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் —"குறள்"

பிரதி சனிக்கிழமை வெளிவரும்

தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும் ;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து சொல்வேன் !
ஏற்றதொரு கருத்தை என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் ; எவர்வரினும்
நில்லேன் ; அஞ்சேன் !"

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா — வெளி நாடு மூன்றணா.

மலர் 1 | சென்னை 7—8—1954 சனி | இதழ் 7

நடந்தவைகள் அழிந்தவைகளாக இருக்கட்டும்!

இனி

காற்று பலமாக வீசிக்கொண்டிருந்தது. "ஓ"வென்ற சப்தம். அந்தச் சோலை, சண்டமாருதத்திற்குப் பணிய மறுத்துப் போராடிக்கொண்டிருந்தது. காரிருளைப் பிளந்து மின்னல் புகுந்து புறப்பட்டது. அதில் பிறந்த ஒளியிலே சோலையின் முழு உருவத்தையும் காணமுடிந்தது.

குள்ளமான ஓர் உருவம்—கம்பீரமான தோற்றம்—தெளிவு நிறைந்த முகம்—பகைவனுக்கும் பாடங்கூறும் கண்கள்–கொண்ட உருவம், வீசி மறைந்த மின்னல் ஒளியில், சோதி பரப்பி நின்றுகொண்டிருந்தது.

இடிக்கு அது கலங்கவில்லை.

புயலில் சிறிதும் அசையவில்லை,

நினைவை எங்கேயோ வைத்திருந்தது.

ஆனால்....? ஏன் இது...? ஐயோ! என்ன நேர்ந்தது! இடிக்குக் கலங்காத உருவம், வேறு எதற்குக் கலங்கிக் கண்ணீர் வடிக்கிறது? மளமளவென்று சொரிகிறதே! புத்தனைப்போன்ற பொறுமையோடு காணப்படும் இவருக்கு நேர்ந்த துயர் என்ன?

இடியையும்...புயலையும் மீறி தூரத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

ஒரு குரலா? இல்லை! நான்கு குரல்கள் !

நான்கும் கூட்டுக் குரலாகப் பிறந்தன !

சொல்லை, அருகில் வந்ததும் சொல்ல பயப்பட்டனர், யார் முதலில் சொல்லுவது என்று திகைத்தனர்—குழம்பினர். அவர்களில் ஒருவர் மிகவும் குள்ளம்: மாநிறம்: அழகிய இளமீசை; நடுவகிடு எடுத்திருந்தார். மற்றொருவர் நல்ல உயரம்; நடுவகிடு எடுத்தவர்தான்; மாநிறம். இன்னொருவர், நடுத்தர உயரம்: மாநிறம்; கெச்சலான உடம்பு. நான்காமவர், ராமநாதபுரம் மறவர்களைப்போல கம்பீரமான தோற்றம்; கருப்புத்தான்; அவசரத்தையும் ஆவேசத்தையும் காட்டும் விழிகள்.

கடைசியாக குள்ளமானவர், தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, "அண்ணா!" என்றார்.

அந்தப் புனித உருவம் மெதுவாகத் திரும்பிற்று, அதன் கண்களைப் பார்த்தனர் நால்வரும், கண்ணீர் "அண்ணா!" என்று நான்கு குரல்களும் உணர்ச்சி பொங்க வெடித்தன. நான்கும் மளமளவெனக் கண்ணீர் வடித்தன.

மீண்டும்..."அண்ணா!" அழைத்தனர்.

அவர் நிமிர்ந்தார், அவர் கண்களில் கோடி சூரியப் பிரகாசம் மின்னிப் பொலிந்தது.

"இல்லை பேசாதீர்கள். நீங்கள் செய்த குற்றம் மிகப்பெரியது. சகோதரர்கள் செய்யும்கள். நாம் யார்? எங்கு பிறந்தோம்? எப்படி வளர்ந்தோம்? நாம் போக வேண்டிய இடம் எது? இடையிலுள்ள தடைகள் எத்தனை? அனுபவித்த அவஸ்தைகள் எத்தனை? நினைவிருக்கிறதா? அல்லது அதையும் மறந்துவிட்டீர்களா? நீ அவனை ஏசுகிறாய்; அவன் உன்னை ஏசுகிறான்! இதுதானா நம் முன் உள்ள பிரச்சினை! எண்ணிப்பாருங்களடா! தந்தையை விட்டு நாம் பிரிந்தபோது சந்தோஷமாகவா பிரிந்தோம். கண்ணீரை அருவியாகப் பொழிந்து கலங்கிய நெஞ்சோடும் பிசைந்த கைகளோடும் பிரிந்தோமே! அப்போது ஏற்பட்ட துக்கம்தானடா நம்மை ஒரு சேரப் பிணைத்தது! அதற்குள் ஏனடா மறந்து விட்டீர்கள்? பற்றும் பாசமும் அற்றுப்போய் விட்டதா? பழக்குலைக் குடும்பத்தில்—உங்கள் நால்வருக்கும்—மனக் குழப்பம் வந்துவிட்டதா? இவன் என் அண்ணன்! இவன் என் தம்பி, இவள் என் சகோதரி. யார் யார்? எங்கெங்கோ பிறந்தவர்கள்—உடன் பிறந்தவர்களைக் காட்டிலும் அதிகமாக ஒட்டுறவு கொண்டவர்கள்! — பாசக்கயிற்றால் பிணைக்கப்பட்டு நேசத் துடிப்போடு வாழ்கிறவர்கள்! ஐயோ! இந்த ஒற்றுமையைக் குலைத்து விடாதீர்களடா!"

பேச்சை முடிக்கு முன்னே பத்தின் கலங்கரை விளக்கங்கள் பட்டபாடு கொஞ்சமா? இன்னும் படவேண்டியிருப்பதும் சாதாரணமா? மறந்து விட்டீர்களே! ஐயோ! மறந்துவிட்டீர்களே!"

"அண்ணா!" என்று குள்ளமானவர் துவங்கினார்.

இந்தத் தவறு என்னால்தான் ஆரம்பமாயிற்று. இனி இது நேராது அண்ணா!" என்றார்.

நெட்டையானவர் உடனே சொன்னார். "அதைப் பெரிதுபடுத்த நான் காரணமாயிருந்தேன், அண்ணா! இனி நிச்சயமாக இது நடவாது!"

மூன்றாவதாக நடுத்தரமானவர் சொன்னார். "நான் கொஞ்சம் கடுமையான முறையில் நடந்துவிட்டேன். இனி நடக்கமாட்டேன் அண்ணா!"

கடைசியாக கம்பீரமானவர் பேசினார். நான் தேவை இல்லாமல் இதில் தலையிட்டு விட்டேன், அண்ணா! இனி நேராது, இது போல்!"

வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, புனித உருவம் நிமிர்ந்துபார்த்தது.

"அண்ணா!"—நான்கு குரல்கள் பொங்கி வெடித்தன!

"தம்பீ!"

"அண்ணா!"

கைகளை அகல விரித்து புனிதர் நால்வரையும் இறுக அணைத்துக்கொண்டார். பெரு மூச்சு விம்மித் தாழ்ந்து ஐவர் மனதிலும் இருந்த பாரம் இறங்கிற்று.

நடப்பவைகள் நல்லவைகளாக மலரட்டும்!

"அண்ணா!"

வனம் அதை எதிரொலித்தது.

"அண்ணா!"

குரல்கள் அருகில் பிறந்தன.

நான்குபேர் வேகமாக ஓடி வந்தனர், மூச்சு வாங்க. குற்றம் புரிந்தவர்களைப்போல அவர்கள் நின்றனர். தூரத்திலிருந்து அழைத்துவந்த—அந்த பாசம் நிறைந்த "அண்ணா!" என்ற குற்றமல்ல. இதை நான் மன்னிக்கமாட்டேன்."

நெட்டையானவர் ஏதோ சொல்ல வாயை எடுத்தார்.

நடுத்தரமானவர் "உஸ்" என்றார்.

புனித உருவம் போயிற்று,

"தம்பிமார்களே! சில்லறைத் தகராறைப் பெரிதாக்கிக் கொண்ட தம்பிமார்களே! கேளுங்கள் புனித உருவத்தின் கண்கள் ஆறு பெருக்கின.

"கும்பகோணத்தில் கொட்டிய குருதி, சதிகார்ரகளால் வீழ்த்தப்பட்ட நம் சகோதரர்களின் பிணங்கள்—ஏனடா உங்கள் நினைவில் இல்லை! செத்தவர்கள் ஏன் செத்தார்கள்! நம் குடும்பத்தின் பெருமையை உணர்த்த! கைகால் ஒடிந்தவர்கள், நம் குடும்

அன்பு—ஆசை–பற்று–பாசம்—ஆகா! இனி அவர்களுக்குள் சிறு குழப்பங்கூட இல்லை!

ஐவரும் நடந்தனர்.

புனிதர் முன் நடந்தார்; சொன்னார்.

"நடந்தவைகள் அழிந்தவைகளாக இருக்கட்டும்; இனி நடப்பவைகள் நல்லவைகளாக மலரட்டும்!"

கண்ணதாசன்.

எண்ணம்	இலக்கியத்தில் காதல்	கேள்விப் பெட்டி

Best copy available.

எண்ணம்

கண்ணதாசன்

குடியேற்றம் தேர்தலில் காமராசருக்கு வெற்றி கிடைத்து விட்டது. ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தை ஒழித்தது மெத்த சரி என்கிற தீர்ப்பை பொதுமக்கள் கூறிவிட்டார்கள். கீழ்ப்பாக்கம் முகத்தில் கரி பூசப்பட்டு விட்டது. ஆச்சாரியார் இனி கல்வித் திட்டம் பற்றி வாயைத் திறக்கமாட்டார். இதில் காங்கிரசிலுள்ள திராவிட மக்கள் எல்லோரும் உண்மையில் பெரு மகிழ்வு கொள்வார்கள். தேர்தலில் நின்றால், தோற்றுப் போவோம் என்று கருதி பின் வாசலையே பெருவாசலாக்கிக் கொண்ட ஆச்சாரியாரை, காமராசர் மிஞ்சி விட்டார். "இனி எந்தநாளும் பார்ப்பனர்கள் அரியாசனம் ஏறமுடியாது; ஏறினாலும் வாழமுடியாது! திராவிடர்கள், அவர்கள் யோக்கியமானவர்களாக இருந்தால் ஆள முடியும்" என்பது தீர்ப்பாகி விட்டது. பார்ப்பனர்களில் யோக்கியர்களாக இருக்கிறவர்கள் ஆளமுடியாதா என்ற கேள்வி எழும். 'பார்ப்பனன் என்கிற திமிரோடு வாழ்கிறயாரும் யோக்கியர்களாக இருக்க முடியாது; அதை விட்டுவிட்டவர்கள் பார்ப்பனர்களாக இருக்கமுடியாது என்பதே பதில்.

நாம் முன்பே சொன்னது போல், இது கழகத்தின் வெற்றியல்ல—கல்வித்திட்ட ஒழிப்பின் வெற்றி! இனி, காமராசர்; 'யோக்கியர்' என்கிறவரையில் நமக்கு நண்பர்; காங்கிரஸ்காரர் என்கிற முறையில் நமது பகைவர். அவர் செய்யப் போகிற காரியங்களை வைத்துத்தான் இனி அவருக்கும் நமக்கும் உள்ள உறவு கணிக்கப்படும்.

"குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்தது" என்கிற கதையாக, நாம் அவரைக் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்க முடியாது. இன்றைக்கு ஆதரித்து பக்கம் பக்கமாக எழுதிவிட்டு நாளைத் தூற்றுகிற பழக்கமும் நமக்குக் கிடையாது.

இனிமேல்தான் காமராசரின் பொறுப்பு அதிகமாகிறது என்பதையும் நாம் கூறியாகவேண்டும். கவர்னரின் சம்பளத்தைக் குறைப்பது; இந்தியை விமானத்தில் ஏற்றி வடக்கே அனுப்பி வைப்பது; டால்மியாபுரத்தைக் கல்லக்குடியாக்க முயற்சி எடுத்துக் கொள்வது; என்ஜினீரிங் கல்லூரியில் திராவிட இளைஞர்களுக்கு இடம் கிடைக்காதபடி ஆக்ரமித்துக் கொண்டிருக்கும் பார்ப்பனக் கும்பலைத் தடுத்து 'சம நீதி' கிடைக்க வழி செய்வது; இலங்கையிலிருந்து துரத்தி அடிக்கப்படும் தமிழ் மக்கள் இங்கு வர நேரும்போது, இங்கே இருக்கும் சௌகார் பேட்டையைக் காலிசெய்து வடவர் கும்பலை ரயிலேற்றி, அனுப்பிவிட்டு, வரும் தமிழ் மக்களுக்கு இடம் கொடுப்பது; ஆகிய பல பிரச்சினைகளை அவர் சமாளிக்க வேண்டி யிருக்கும். இந்த அத்தனை பிரச்னைகளையும் துணிச்சலோடு அவர் தீர்த்துவைக்க முன்வந்தால், அறிஞர் அண்ணா அவர்களின் அருமையான யோசனைகளும் பக்கபலமும் அவருக்குக் கண்டிப்பாகக் கிடைக்கும்.

காமராசர் இந்த வெற்றியின் மூலம் சமாளிக்க வேண்டிய இன்னொரு பிரச்சினை, "உள்ளே இருந்து உலைவைக்கும்" இரு அமைச்சர்களாகும். இவர்கள் திராவிடர்கள் என்பதற்காக நம்ப வேண்டும் என்று எந்த மடையனும் சொல்லமாட்டான். இவர்கள் பிறப்பால் திராவிடர்களே ஒழிய, குணத்தால் மைலாப்பூரார்கள்தான். கூடுமானவரை— இவர்களை விலக்க முடியாவிட்டாலும் — இவர்களிடமிருக்கும் அதிகாரங்களில், இலாக்காக்களில் முக்கிய மானவற்றைத் திரும்பப் பெற்றுவிடுவது நல்லது.

ஆக, காமராசர், வென்றது பெரிதல்ல; இனி நிதானித்து நடப்பதுதான் முக்கியம். எச்சரிக்கையோடும் நாணயத்தோடும் காமராசர் செயல்படுவார் என்று நம்புகிறோம். திராவிடர்களின் பொது எதிரிகள்—சூழ்ச்சியால் பிழைப்போர்—காமராசரைக் கவிழ்க்க முற்பட்டால், காஞ்சீபுரம் பக்கத்தில்தான் இருக்கிறது என்பதையும் 'பகைப்புலன்' அறிய வேண்டும். *

பொக்காஷியோ கதை

2

அந்தோணியா என்பவர்தான் பிளாரன்ஸ் நகரத்தின் பாதிரியார். மிகவும் படித்தவர்; கௌரவமானவர். அந்தச் சமயத்தில் ராபர்ட் மன்னனிடம் ராணுவ வீரனாக இருந்த தேகோ அங்கு வந்திருந்தான். பார்ப்பதற்கு அவன் அழகாகவும், கம்பீரமாகவும் இருப்பான். பெண்கள் என்றால் அவனுக்குப் பைத்தியம். ஒரு நாள் அந்த பிளாரன்ஸ் நகர மங்கைகளில் ஒருத்தியைப் பார்த்து, அவள் மீது மோகம் கொண்டுவிட்டான். அவள் யாரென்றால், மேலே சொன்ன அந்தோணியோ பாதிரியாருடைய தம்பியின் பேத்தி. அவளுடைய கணவன் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவனானாலும் பெரிய லோபி, அதனால் அந்த இளமங்கை, தேகோவின் விருப்பத்துக்கு இணங்கிவிட்டாள். ஐந்நூறு தங்கப் பிளாரின் நாணயங்கள் கொடுக்கும் பக்ஷத்தில் தான் தேகோவுடன் ஒரு நாள் இரவைக் கழிக்கத் தயார் என்று தெரிவித்தாள். தேகோவும் சம்மதித்தான். ஆனால் அவன் அவளுக்குக் கொடுத்தது தங்கத்தால் ஆன பிளாரின் நாணயங்களையல்ல; தங்க முலாம் பூசிய வெள்ளி நாணயங்களைத்தான். இளமங்கையோ உண்மையை அறியாமல் அந்த ஐந்நூறையும் வாங்கிக் கொண்டுபோய் தன் கணவனிடம் கொடுத்தாள். ஆனால் வெகு சீக்கிரத்திலேயே குட்டு வெளிப்பட்டுவிட்டது. இளமங்கை ஒழுக்கம் தவறியதையும், ஏமாந்ததையும் குறித்து ஊரார் வம்பளக்க ஆரம்பித்துவிட்டார்கள். அவளுடைய கணவனுக்கு அவமானம் தாங்கமுடியவில்லை. எங்கும் இதே பேச்சு; இதே பிரஸ்தாபம். ஆனால், அந்தோணியோ பாதிரியார் மட்டும் வேண்டுமென்றே எதுவும் அறியாதவர் போல நடித்துக்கொண்டு, தேகோவுடன் சகஜமாகப் பழகி வந்தார்.

அந்த நகரத்தில் அர்ச். யோவான் திருவிழா வந்தது. அப்பொழுது பந்தய விளையாட்டுகள் நடப்பது உண்டு. வேடிக்கை பார்ப்பதற்காகப் பாதிரியாரும், தேகோ என்ற அந்த ராணுவ வீரனும் அங்கே போய்ச் சேர்ந்தார்கள். பெண்களும் தமாஷ் பார்க்கக் கூட்டம் கூட்டமாக வந்திருந்தார்கள். அவர்களில் நானா என்ற ஒரு பெண்ணின் பக்கமாக இருவரும் சென்றார்கள். பாதிரியார் அவளுடைய தோளின் மேல் கையை வைத்துக்கொண்டு, "நானா! இந்த ராணுவ வீரரைப் பார்த்தாயா? இவரை உன்னால் முறியடிக்க முடியுமா?" என்று கேட்டார்.

நாலுபேருக்கு மத்தியில் பாதிரியார் தன்னை இவ்வாறு அவமானப்படுத்தியதை அவளால் தாங்க முடியவில்லை. பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று விரும்பினாள். பாதிரியாருடைய தம்பியின் பேத்தியை அதே ராணுவ வீரன் ஏமாற்றிக்கெடுத்தது அவளுக்குத் தெரியும், ஆகவே அந்த விஷயத்தைப் பாதிரியின் முன்னிலையிலேயே மறைமுகமாக எடுத்துச் சொல்லி, அத்தனைபேருக்கும் நடுவில் அவரை மானபங்கம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்துப் பின் கண்டபடி பதில் அளித்தாள்:

"என்னால் முறியடிக்கக்கூடும், பாதிரியாரே. ஆனால் ஒரே ஒரு நிபந்தனை: எனக்கு முதலில் பணம் கொடுத்துவிட வேண்டும். அதாவது முலாம் பூசிய நாணயங்களைக் கொடுக்காமல், அசல் தங்க நாணயங்களைக் கொடுக்க வேண்டும்."

பாதிரியார், தம் தம்பியினுடைய பேத்தியின் குட்டு வெளிப்பட்டுவிட்டதே என்று அவமானம் தாங்காமல் வாயடைத்துப் போனார். *

சி. பி. சிற்றரசு
அவர்களை ஆசிரியராகக்
கொண்ட
தீச்சுடர்
ஆகஸ்டு முதல் வாரத்திலிருந்து 16 பக்கங்களாக வெளிவந்து கொண்டிருக்கிறது. விலை 2 அணாதான் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.
நிர்வாகி,
தீச்சுடர்
தெப்பக்குளம் அஞ்சல்
திருச்சி.

இயற்கையெய்தினர்



சிவதாபுரம் திரு. எஸ். எம். சுப்பிரமணிய மருத்துவரின் மகனாரும், அகஸ்திய முனிவர் ஆயுர் வேத மருத்துவ மனையின் அதிபருமான திரு. எஸ். எம். இரத்தினவேல் மருத்துவர் 24—7—54 மாலை இயற்கை எய்தினர். இவர் தர்மங்கள் பல செய்தவர். தயாள குணம் படைத்தவர்.

இலக்கியத்தில் காதல்

காரை. முத்துப்புலவர்

மதனுபிஷேகம் கோயில் மண்டபத்தில் நடனமாடினாள். வளைந்து வளைந்து ஆடினாள். அந்த ஒவ்வொரு வளைவுக்குள்ளும் ஐயனைச் சுருட்டிக்கொண்டாள்! ஐயன் அதைச் சொல்லும் போது பரிதாபமாக இருக்கிறது. "விறலியே! அவள் கையைக் காட்டினாள்; என் மேல் கணை பாய்ந்தது. அவள் கண்களை அசைத்தாள்; அந்தக் கணை என் மேனியைப் புண்ணாக்கி விட்டது. கீழே குனிந்து பாவம் பிடித்தாள்; அது என் மேனியைப் பிடிப்பது போலிருந்தது. அவள் ஒரு தாவுத் தாவினாள்; அது என் தலையில் தாவுவது போல் இருந்தது. மல்லாந்து ஆடினாள்; என்னை வா வென்று அழைத்துச் சாய்வது போல் இருந்தது. இன்னும் என்ன சொல்வேன், விறலி!" என்று பெருமூச்சு விடுகிறான்.

"காதல் வாய்ப்பட்ட ஆண்மகன் கோழையாகத் தோற்றந் தருவான்!" என்பர் அறிஞர்கள். இவன் படு கோழையாகக் காட்சியளிக்கிறான், கவியின் கைவண்ணத்தால். அந்த மண்டபத்திலே மற்றும் அவன் கண்ட காட்சிகள் வேடிக்கை. மதனுபிஷேகத்தின் ஆட்டத்தைப் பார்த்தபடியே சிலர் நடந்தார்களாம்; ஒருவர் மேல் ஒருவர் மோதிக்கொண்டார்களாம். யானைமேல் செல்லும் மன்னவரும் அவளது கொங்கை மத்தகத்தைப் பார்த்துக் கொதித்தார்களாம். இப்படி அவள் ஆட்டத்தை முடித்துக்கொண்டு, சந்தன கும்பஸ்தனங்கள் சுமந்து, இடை "நைந்தோம்!" என்று நடுங்க நடந்து, வீட்டுக்குச் செல்லப் புறப்படுகிறாள்.

அந்த அப்பாவிப் பார்ப்பனனும், பெண் யானையைத் தொடரும் பெரு யானைபோல்—அந்தப் பண்ணுர் மொழியாளைப் பின்பற்றுகிறான். பின்பற்றி வந்து, அவள் தனது பொன் முகப்பு மாளிகைக்குள் போய்ப் புகுவதைப் பார்த்தபடி, முன் முகப்பு வாசலிலே நிற்கிறான். உடனே உள்ளே இருந்து "செக்கு வருவதுபோல் சிமாட்டி கை மருந்துச் சொக்கி" எனும் பாவை தோன்றுகிறாள்! "நீ யார்?" என்கிறாள்; உங்களூர் யாதென்கிறாள்; உங்கள் பேரென்ன என்கிறாள்; அண்டியண்டிப் பேச்சிடுகிறாள். உடனே பார்ப்பனன்,

"சீரங்கமெங்கள் பதி;
சிங்கையரென் தகப்பன்.
சாரங்கபாணி ஐயர்
தம்பி நான்—நாரணையர்
சுப்பையரென் மாமனார்;
சோமாசிப் பட்டர்பெறும்
அப்பையங்கார் எங்கள்
தம்பியாகுமே!—செப்பு கவி
அஷ்டாவதானி என்பேர்;
ஆயிழை என்மனைவி
மட்டார்குழலி!
மனவெறுப்பால்—விட்டேகி
நாடிவந்தேன் உங்கள் பதி...."

—என்று பரம்பரை உட்பட வரலாறு கூறுகிறான். கூறிவிட்டு, "ஆமாம்! ஏ, செக்குபோன்ற சொக்கி! மண்டபத்தில் ஆடிவிட்டு இந்த வீட்டுக்குள் புகுந்த பெண் யார்?" என்று கேட்கிறான். உடனே அவள் சிரிக்கிறாள். "அட பைத்தியக்காரப் பார்ப்பனு!" என்கிறாள். "அவள், மாணிக்க மாலை பெற்ற வச்சிரம்; கும்பகுடக் காணிக்கு வாய்த்த கனதனம்; ஆணிமுத்து; வான மும்இச்சைகொள்ளும் மேனகை; பெண்ணுக்குப் பெண் இச்சை கொள்ளும் பெண்ணமுது; சாஸ்திரங்களும் கொக்கோகமும் சொல்லுகிறதே காமக்கலை, அதனுடைய சாரமே—அதாவது 'ஜூஸ்'—அவள்தான். அவளை நானிலத்தோர் எல்லோரும் அறிந்திருக்க, உனக்குத் தெரியவில்லையே! அவள் 'இன்டர் நேஷனல் ரம்பை'யப்பா! பாரா தார் இல்லை; பார்த்துவிட்டால் பின்தொடர்ந்து வாராதார் இல்லை!" என்று சொல்லிச் சிரிக்கிறாள். பார்ப்பான் உடம்பு சூடேறுகிறது. "ஆமாம்! இன்றைக்கு யாராவது வருவார்களா?" என்று கேட்கிறான். உடனே அந்தத்தோழி ஒரு 'சஸ்பென்ஸ்' உண்டாக்குகிறாள்:

"பட்டணம் பாலக்கரையாரோ, கோட்டைக் கட்டளையாரோ, சோலையப்ப பிள்ளையோ, மாலையப்ப பிள்ளையோ, சற்கார் மணியம் கனகசபாபதியோ, பங்காருவோ, ஆரம் மணியம் அரசப்பனே, ஆயத்துரை மணியம் ஆண்டியோ, தான மணியம் சதாசிவனே, கோயில் மணியம் கும்பலிங்கப்பிள்ளையோ, மாட்டு வரிக்காரனே, பாசி வரிக்காரனே, பீரங்கிக்காரனே!—அப்பப்பா! ஒரு இரவில் எத்தனை பேரோ, மதனுபிஷேகத்தைத் தேடி வருகிறார்கள்" என்று சொல்லி நிறுத்துகிறாள். பார்ப்பான் நாடி தளர்ந்து விடுகிறது. உடனே தோழி, "ஆனாலும், மதனுபிஷேகம், அவர்களில் ஒருவனிடம்கூட ஆசை வைக்கவில்லை! அவள் சிங்கமய்யா! அது இந்தச் சிறு தேரைகளையா தின்னும்!" என்று கூறி, கொஞ்சம் நிறுத்தி, "உங்களைப்போன்ற நற்குணமுள்ள வர்களையே நாடுவாள்!" என்று வியாபார பேரத்தை கச்சிதமாக நிறுத்துகிறாள். இதிலே கவி, கைவண்ணங் காட்டுகிறான். தாசிகளைக் காட்டிலும் அவர்களது தோழிகள் கைதேர்ந்தவர்கள் என்று சொல்லாமல் சொல்லுகிறான். தோழிகளைப் பற்றி ஒரு பகுதியில்கூட நிறையக் குறிப்பிடுகிறான். ஒரு தோழியை, "அவள், தானும் ஒரு கை பார்ப்பாள், வந்தவரை!" என்கிறான்.

தோழி மதனுபிஷேகத்தைப் பற்றிச் சொல்லக் கேட்ட பார்ப்பனன் உள்ளம் மறுபடியும் துளிர் விடுகிறது! "நம்மை அவள் மனப்பூர்வமாகக் காதலிக்கிறாள்" என்று நம்புகிறான், அப்பாவி! "இது புனிதமான காதல்!" என்கிற மாதிரி சிந்திக்கிறான். உடனே......

......—மாதுக்கு இன்று
ஆர்வருவார் சொல்லென்றேன்;
"யாருமில்லை! பொன்
கொடுத்து
நீர்வருவீராகிலிங்கே நிற்பானேன்
—வாருமென்றாள்.
முத்தனைய முத்துநகை
மோகவல்லிக்குப் பணம்
எத்தனைபொன் சொல்லென்
நியம்பினேன்—அத்தைக்கு
முன்னூறுபொன்; மகளுக்கு
முன்னூறுபொன்; எனக்கு
பின்னூறுபொன்; தோழிப்
பெண்களுக்கு—சொன்னது
ஒருநூறு பொன்னும்
ஒருமுடிப்பாய்த் தந்து
வருவீரேல் வாருமென்றாள்
மங்கை!......

—உடனே பார்ப்பான் பொன் முடிப்பைக் கொடுத்து, "அம்போ!" என்று நிற்கிறான். உள்ளே இருந்து, பைந்தாரணி சூடிய பைங்கனிவாய்ப் பெண்கள் சிலர் வருகிறார்கள், உள்ளே அழைக்கிறார்கள். ஒருத்தி கை விளக்குக் கொண்டு வருகிறாள்; ஒருத்தி கால் விளக்க நல்ல தண்ணீர் கொண்டு வருகிறாள்; ஒருத்தி சட்டையைக் கழற்றி கையில் வாங்கிக் கொள்கிறாள். இன்னொருத்தி வெற்றிலை கொண்டு வருகிறாள்; ஒருத்தி படிகம் பிடிக்கிறாள், ஒருத்தி சந்தனம் பூசுகிறாள்; ஒருத்தி கவரி வீசுகிறாள், இன்னொருத்தி அப்படியே தன் கையைக் கொடுத்துப் பிடித்துக்கொள்ளச் சொல்லி நடக்கவைக்கிறாள். வேறொருத்தி ஓடிவந்து, "ஐயோ! கால் வலிக்குமே!" என்று கூறி, நடைபாதைக்கு பட்டு விரிக்கிறாள். பார்ப்பான், "புலிபோல்" அந்த மனைக்குள் செல்கிறான் என்கிறான் கவி!

பொன் பெற்றுக்கொண்ட மதனுபிஷேகம், உத்தம பத்தினி மாதிரி, மெதுவாக நடந்துவந்து, கதவுகளுப் பின்னால் நின்றுகொண்டு, கும்பிடுகிறாள். அவள் வருவதை, "காதலரைச் சேர்ந்தறியாக் கன்னிபோல்" என்கிறான், கவி. அவள் சூதறியாப் பேதைபோல் கூசி மெல்லப் பேசுகிறாள். தனக்கே உரித்தான பொய்யை அவிழ்த்து விடுகிறாள். பொய், மளமளவென்று வருகிறது! கற்பனை அடுக்கடுக்காகப் பொழிகிறது! 'அட எஞ்சாமி! நான் மண்டபத்தில் ஆடும்போதே உன்னைப் பார்த்து மையலாகிவிட்டேன்டா! உடனே பக்கத்திலிருந்த தோழியைவிட்டு உம்மை அழைத்துவரச் சொன்னேன். அந்தக் கள்ளி குழப்பி விட்டு விட்டாளடா! ஐயரே! என் குல தெய்வந்தாம் உன்னைக் கொண்டு வந்து சேர்த்துவிட்டது! அடடா! வாசலில் நிற்கிறீர்களே! உட்காருங்கள்! பார்த்துப் பேசிவிட்டுப் போவதென்றால் நான் விடமாட்டேன்; நீங்கள்தான் என் பதி!!" என்கிறாள். உடனே பார்ப்பான் தலைகால் புரியாதவனாய் ஆகிவிடுகிறான். அவள் கையைப் பிடித்துக்கொண்டு முகத்தைப் பார்க்கிறான். அவள் வீணையை மீட்டிப் பாடுகிறாள், அதை அவன் ரசித்தபடி இருக்கிறான். உடனே குடுகுடுவென்று வருகிறாள், "மாஜிக் கன்னி!" —அதாவது ஒல்மாடல்—அதாவது தாய்க்கிழவி!—அதாவது அனுபவித்து ஓய்ந்த கட்டை!—அவள்தான் மாணிக்க மாலை என்ற அந்தத் தாய்! சுப்ரதீபக் கவிக்கு அவளைப் பார்த்தால்தான் கவி பொங்குகிறது! உடனே அவளை வர்ணிக்கத் துவங்குகிறான்.

"விற்பிடித்து வாங்கினாற் போல் வளைந்த வரட்டு உடலும், தாங்கி வைத்த காலும் தடிக் கொம்பும், தேங்காய்க் குடுக்கை போல் வாயும், கொடுவாயும், சற்றே நடுக்கும் தலையும் நரையும், பொடிக் கொசுக்கள் மொய்த்த கண்ணும்" கொண்டவள் என்கிறான், அவளது மார்பகத்தைக்கூட சண்டாளக் கவி விடவில்லை. "வயதேறியவள்—போகட்டும்! இவளை வர்ணித்தால் சாரமிருக்காது!" என்று எண்ணவுமில்லை. வர்ணிக்கிறான். சாரம் இருக்கிறதையா, இருக்கிறது!

"வித்துக்கு விட்ட சுரைக்காய் போல், முழங்காலைத் தொட்ட முலைத்தாய்க் கிழவி!" என்கிறான். விபரம் தேவையில்லை. உவமை படுபிரமாதம்! அப்படிப்பட்ட 'அழகு மாமி' வந்து நிற்பதைப் பார்ப்பான் பார்க்கிறான். ஐயோ! அந்தக் காலம் முடிந்த கட்டைக்குத்தான் என்ன வெட்கம்!

(தொடரும்)

யார்?

இங்கிலாந்திலே ராபர்ட் புருஸ் என்றொரு பேச்சாளி இருந்தார். அவர் ஒருமுறை மேடையில் பேசிக்கொண்டிருக்கும்போது, ஒருவன் ஒரு சீட்டைக் கொண்டுவந்து கொடுத்தான். புருஸ் அதை விரித்துப் பார்த்தார். அதில் "முட்டாள்" என்றுமட்டும் எழுதி இருந்தது. உடனே புருஸ் ஆத்திரமில்லாமல், அந்த சீட்டைக் காட்டி, மக்களிடம் சொன்னார்: "இதுவரை எனக்கு கேள்வி எழுதிவிட்டு கையெழுத்துப் போடாமல் வருகிற சீட்டுகள் மட்டுமே வந்துகொண்டிருந்தன. இதோ, யாரோ ஒரு நண்பர், கையெழுத்துப் போட்டுவிட்டு கேள்வியை எழுதாமல் விட்டிருக்கிறார்."

திருவாங்கூர் கொச்சியில் தி. மு. கழகம்!

கிளம்பிற்றுக்காண் தமிழர் சிங்கக் கூட்டம்!

அவசரத்தில் தொடுவதில்லை; தொட்டதை விடுவதில்லை!

விடி வெள்ளி முளைத்து விட்டது....

திருவாங்கூர்–கொச்சி வாழ் தமிழ் மக்களின் அறப்போர், ஓர் புதிய உருவம் பெற்றுவிட்டது! திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களும் துணைச் செயலாளர் தோழர் மதியழகன் அவர்களும் திரு–கொச்சி தமிழர் அறப்போர் நிலைமையை அறிந்து நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஜான் அவர்களைச் சந்தித்து, அறப்போரில் ஈடுபட்டிருக்கும் போராட்ட வீரர்களைக்கண்டு—திருவாங்கூர் தமிழர் அறப்போராட்டத்தில் தி. மு. கழகம் கலந்து கொள்ளும், அதற்கு அடையாளமாக ஆகஸ்டு 6-ந் தேதியன்று நாகர் கோவிலிலே அங்குள்ள நீதி மன்றத்தின் வாசலிலே தோழர் ஜான் பார்வையில் ஒரு நாள் மறியல் நடைபெறும், என அறிவித்திருக்கிறார் அறிஞர் அண்ணா!

அநீதி அறிந்தறியான், பிறர் உரிமையைப் பறித்தறியான், கொடுங்கோல் புரிந்ததில்லை, இழி செயல் செய்ததில்லை தமிழன்—அன்றிலிருந்து இன்றுவரையிலும்! ஆனால், எத்திசை நோக்கினும் அவன் உரிமை சூறையாடப்படுகிறது. கொடுங்கோல்கணை தொடுக்கப்படுகிறது, அநீதி இழைக்கப்படுகிறது! மலேயாவிலே தூக்குமேடை, இலங்கையிலே நாடு கடத்தல், தென்னாப்பிரிக்காவிலே இழிச்சொல் — என்று வாழ்க்கையைக் கடத்திவரும் தமிழன், தமிழக எல்லையோரத்திலேயே பட்டம் தாணுவின் கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறை ஈட்டிகளால் குத்திச் சாய்க்கப்பட்டு வருகிறான்! பார்வைக்கு அழகாயிராவிட்டாலும், பண்பில் பக்குவம் பெற்றிருந்த பட்டம் தாணு, அரசு கட்டில் ஏறியவுடன், முதன் முதலாக தமிழரின் நெஞ்சிலே தான் எதேச்சதிகார முட்களைச் சொருகிறார்! கண் பார்வையிலே காந்தியின் திருவுருவத்தைப் பதித்து வைத்திருந்த பட்டம் தாணு, காரியத்தில் குல்லுக பட்டக்கோமான் ஆச்சாரியாரை நிறுத்தி வைப்பதை கண்ட தமிழர்கள் கொதித்தெழுந்தார்கள்—அறக்களம் அமைத்தார்கள்!

அந்த அறக்களத்தில்பிறந்தது தான் நாஞ்சில் தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு இணைக்க வேண்டுமென்ற இலட்சிய கீதம்! பட்டம் தாணுவின் அடக்குமுறையை எதிர்க்கத் தொடங்கி, தமிழ்ப் பகுதிகள் தாயகத்துடன் இணைக்கப்பட்டாக வேண்டும் என்ற முடிவுக்கு—மூலாதாரப் பிரச்சனைக்கு — முன்னணியாக அமைந்துவிட்டது!

உயிரைப் பணயம் வைத்து இலட்சியத்திற்காக பச்சை இரத்தத்தை பட்டம்தாணு சர்க்காரிலே சிந்திவரும் தமிழரின் அறப்போரைக் கண்டு. அலகாபாத் அபேதவாதி பண்டித நேரு ஆச்சரியப்பட்டாராம்! உலகத்தின் பலபாகங்களிலே முத்தமிழ் மரபினர், நேர்மையற்றோரின் ஆட்சிப் பிடியிலே அல்லல் படுவதைப் பார்த்து பரிதாபப்படாத அவர் 'பாரத நெஞ்சம்' அவர் ஆட்சிக்கு அடிமைபட்டு ஆலவட்ட மெடுக்கும் திரு-கொச்சி சர்க்காரின் போக்கை எதிர்த்துக் கிளம்பும் தமிழரின் அறப்போரைப்பார்த்து ஆச்சரியப்படாமல் அதிர்ச்சியா கொள்ளும்?

சர்க்காரின் ஆதரவில் கேரளத்து மக்களில் ஒரு சிலர் செய்யும் நையாண்டி — வெறி கொண்ட மலையாள அதிகாரிகளின் மிருகத்தனம்— இவைகளுக்கு ஆதரவு காட்டி அநீதியை நாட்டிவரும் பட்டம் தாணுவின் ஆட்சியினால், மனம் நொந்து போயிருக்கும் தமிழரின் அறப்போரைக் கண்டு நேரு விந்தைகொள்கிறாரென்றால், அது தமிழரின் மீது அவருக்கு இருக்கும் அளவற்ற அக்கறைக்கு ஓர் எடுத்துக்காட்டு, விந்தையோடு மட்டுமல்ல, தமிழர் நடத்தும் அறப்போரை நிறுத்திக்கொள்ளுமாறும் வேண்டியிருக்கிறார் நேரு! கட்டளையல்ல, வேண்டுதல்! ஆணவ உச்சியிலிருநது ஒரு அடி இறங்கிவிட்டார். அவர் என்று நாம் சிறிது உள்ளங்குளிர்ந்தாலும், திருவாங்கூர்—கொச்சி வாழ் தமிழ் மக்கள் மனம் குளிரவில்லை, மாறாக எரிமலையென குமுறியிருக்கிறார்கள்!

நேருவானாலும் எந்த மேருவானாலும், யாரு வந்தாலும் எங்கள் இலட்சியம் பூத்து மணம் வீசாதவரையில் அறப்போராட்டம் நடத்திக்கொண்டேதானிருப்போம்—என்று நாஞ்சில் தமிழர் அனைவரும் ஒரே குரலில் கூறும் நிலை பிறந்துவிட்டது!

ஒன்பது தாலுக்காக்கள்...!

நிலப்பரப்போ ஏறத்தாழ 2000 சதுர மைல்!

அதிலே வாழும் தமிழர் தொகை 15 இலட்சம்!

இது திருவாங்கூர்—கொச்சி தமிழ்ப் பகுதியின் ஓர் சிறு படப்பிடிப்பு! நெய்யாற்றின் கரை, விளவங்கோடு, கல்குளம், செங்கோட்டை, தேவி குளம், பீருமேடு, தேவானை அதஸ்தீசுவரம் சித்தூர் முதலிய தாலுக்காக்கள்! நெய்யாற்றின் கரை பகுதிகள் நெல் விளையும் பெரும் பகுதி! பெரும்பாலான தமிழர் ஏர் முனையில் வாழ்க்கையிலே சீர்பெற முயற்சிப்பவர்கள்! தேவி குளம், பீருமேடு முதலிய இடங்களில் ரப்பர் விளைகிறது, மிளகு இருக்கிறது, காப்பியும் தேயிலையும் மணம் வீசுகிறது! இப்பகுதிகளில் ஏறத்தாழ 20 உயர் நிலைப் பள்ளிகளிருக்கின்றன; நாகர் கோவிலிலே இரு கல்லூரிகள் ஒளிர் விடுகின்றன! இப்பகுதி மக்களெல்லோரும் அரசியல் அறிவு கொண்டவர்கள்—இவைகளெல்லாம் தோழர் ஜான் தந்திருக்கும் 'புள்ளி விவரங்கள்'!

டெல்லி ஆட்சி மன்றம், திரு–கொச்சி தமிழக, மக்கள் சபை அங்கத்தினர்களான தோழர்கள் நேசமணியும், ஏ. ஏ. ராசாக் அவர்களும் கொடுத்த மகஜர்களுக்கு செவி கொடுக்கவில்லை; மனதை செலுத்தவில்லை! ஏன்—திருவாங்கூர்—கொச்சி தமிழ் மக்களின் இலட்சியக் குரலையே மதிக்கவில்லை! அதன் விளைவாக தான், தோழர் பட்டம்தாணு, வெறியுள்ளம் கொண்ட மலையாள ஆதிக்கவாதிகளோடு சேர்ந்து தமிழரின் எழுச்சியை அடக்க சூளுரைத்து நிற்கிறார்; தமிழர் இரத்தத்தை சுவை பார்த்து வருகிறார்!

தேவிகுளம், பீறுமேடு பகுதிகளில் வாழ்வோர் தோட்டத் தொழிலாளர். அவர்களின் உரிமைக் குரலை எடுத்து வெளியிட இரண்டு தொழிற் சங்கங்கள் இருக்கின்றன; ஒன்று தென்னிந்திய தோட்டத் தொழிலாளர் யூனியன், மற்றொன்று தமிழ் நாடு காங்கிரசின் ஆதிக்கம் பெற்றது — பத்தாயிரம் உறுப்பினர்களைக் கொண்டது—உரம் வாய்ந்தது! இதற்கெதிராக சில கருங்காலிகளையும் கங்காணிகளையும், சந்து முனையில் சிலம்பு சுழற்றுவோரையும் தெருவோரத்தில் கத்தி கம்புகளை வீசுவோரையும் சேர்த்துக் கொண்டு, ஹைரேஞ் யூனியன் என்னும் ஸ்தாபனம் காளான்போல முளைத்திருக்கிறது! திண்டு திமாசில் சாய்ந்துள்ளோரும் உண்டு உறங்கி உல்லாசபுரி காணுவோரும் அதற்கு வளர்ப்புத் தந்தையர்! அரசு கட்டில் ஆதரவும் அதை ஆட்டிப் படைக்கும் டெல்லி பீடத்தின் அன்பணைப்பும் அதற்கு வழிகாட்டிகள்!

பட்டம்தாணு, இந்த 'கருங்காலி மன்றத்'தை தமிழ் நாடு காங்கிரஸ் நிலையத்தின் மீது மோதவிட்டு, அதிலே மண்டை நொறுங்கி இரத்தம் சிதறும் நிலை பெறும் தமிழரைக் கண்டு களிக்கிறார்! குதிக்கிறார்! கும்மாள மடிக்கிறார்! மலையாளப் போலீஸின் நெய் தடவப்பட்ட மெய்யுடைக்கும் தடிகளும், வெறியுள்ளங் கொண்டோரின் உதடுகள் உமிழும் இழிச் சொற்களும் தமிழரை வாழவிடாமல் செய்து வருகின்றன.

இந்த அநீதிக்கு முடிவு கட்ட, தமிழ்ப் பகுதிகள் தாயகத்தோடு இணைக்கப்பட வேண்டும் என்ற இலட்சிய நாதம் பாடிவரும் தமிழருக்கு, 'பரந்த கண்ணோட்டம்' பேசும் கம்யூனிஸ்ட் தோழர்களும் ஐக்ய தமிழகப் போர்வைக்குள் புகுந்து ஆதரவு காட்டுவது போல் பேசி வருகின்றனர்! சிலம்பு வீரர் சிவஞானம் அவர்களைச் சார்ந்தோரும் 'நடவடிக்கை எடுப்போம்!' என சதிராடுகிறார்களே தவிர, இன்னும் சமர்களத்தில் குதிப்பதற்காக சிந்தனை வானிலே சிறகடித்துக் கொண்டிருக்கிறார்கள்! அவர்களுக்கு புது கவலை! இமயத்தின் உறவு அதிபர் நேரு பண்டிதர் போராட்டத்தை நிறுத்துமாறு வேண்டுதல் விடுத்துள்ளாரே என்பதுதான்!

நாம் மேலே குறிப்பிட்டுள்ளதை போல நகர்கோவில் நீதி மன்றத்தில் ஒருநாள் அடையாள மறியலை நமது இயக்கத்தினர் நடத்துவர் என்ற செய்தி துடிப்பேறிய நெஞ்சத்தோடிருக்கும் தமிழருக்கு தேன் புகட்டும் செய்தி! சிறையில் வாடும் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஏ. நேசமணி விடுதலையடைந்தவுடன் மேலும் அறப்போர் குறித்து ஆலோசனை செய்யப்படும் என்ற அறிவிப்பு திணவெடுக்கும் தோள்களுக்கு 'களம்' காட்டும் தெரிவிப்பு!

திரு–கொச்சி தமிழ் மக்களின் இலட்சிய கீதத்திற்காக நெஞ்சுரம் கொண்ட வெஞ்சமர் மரபினர் சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தமும் ஆட்சித் தோணியைத் தத்தளிக்க வைக்கப் போகும் பெரும் கடலலைகளென பட்டம் தாணுவுக்கு எச்சரிக்கிறோம்! நாஞ்சில் தமிழரின் உரிமைக் குரலை உதாசீனம் செய்யும் டெல்லி கேளாக் காதினரின் அமைதியை உடைத்தெறியும் அமைப்பு வெகுவிரைவில் ஆரம்பமாகப் போவதை கதர் குல்லாய் கோமான் நேரு பண்டிதருக்கு அறிவிக்கிறோம்!

அண்ணா அன்பன்.

பெரும் பயணம்

'பெரும் பயண'த்தின் தொடர்ச்சி, அடுத்த இதழிலிருந்து வெளிவரும். சித்திரங்களும் இடம் பெறும்.

காவேரி

கண்ணதாசன்

சுட்டெரிக்கும் வெய்யில், பரந்து கிடக்கும் புல்வெளியிலிருந்து ஆவி கிளம்புவது போல கானலின் தோற்றம். குளத்து நீரும் கொதிக்கும் நிலை. தூரத்திலே, அழகிய சிறு மாடிவீடு ஒன்று. அதில்......?

"ராக்காயி.........ஈ.........ஈ...!"

"ஏனம்மா!"

"அவரு வந்துட்டாரா!"

"இன்னும் வரல்லேம்மா!"

இந்நேரம் வரை படுத்திருந்த காவேரி எழுந்து உட்கார்ந்தாள். சோம்பல் முறித்து விட்டுத் திரும்பவும் தலையணையில் சாய்ந்தாள். ஆவிபோல உற்சாகம் கிளம்புவதாக ஒரு பிரமை. திரும்பக் கண்களை மூடினாள்.

"அம்மா"

காவேரி விழித்துத் திரும்பினாள்.

"தபால்கார ஐயா, இந்தக் கடிதத்தை கொடுத்தாரு"

"யாரோ, அவருக்கு எழுதியிருக்கிறார்கள்" என்று எண்ணியவாறே பக்கத்தில் வைத்து விட்டுத்திரும்பவும் கண்களை மூடினாள். தூக்கம் வரவில்லை; எழுந்து, முகத்தைக் கழுவி விட்டு, வானொலியைத் திருகினாள்.

சேர்த்துக் கட்டிய முல்லை
வேண்டுமென்றேன்—நல்ல
சேயிழையவள் சிரிப்பு முல்லை
தந்தாள்!

இந்தப் பாடல் வானொலியிலிருந்து பிறந்தது. காவேரிக்கு உடம்பு புல்லரித்தது, ஒலியைக் குறைத்தாள். இந்தப் பாட்டு, உண்மையிலேயே இறந்த காலத்துக்கு அழைத்துச்சென்று விட்டது.

* * *

"ஏண்டி! உள்ளே பேசிக்கிட்டிருக்கது, யாரடி?"

"ராமண்ணன் மகன் சூடாமணி வந்து பேசிக்கிட்டிருக்காரு!"

இது நடந்தது காவேரியின் பிறந்த வீட்டிலே! கேட்டவள் காவேரி; பதில் சொன்னவள் தங்கை.

காவேரி ஜன்னல் வழியாக உள்ளே பார்த்தாள். சூடாமணி பேசிக்கொண்டிருந்தான்.

அவள் அவனைப் பார்த்த போதுதான் அவனும் அவளைப் பார்த்தான். பார்வை இருவரையும் பிணைத்தது.

பிறிதொரு நாள்......

காவேரி வீட்டில் தனித்திருந்தாள். பெற்றோர், உறவினர் வீட்டுத் திருமணம் ஒன்றிற்குச் சென்றிருந்தனர், காவேரிக்குத் துணையிருந்த வேலைக்காரப் பெண் வெளியேசென்றிருந்தாள். சூடாமணி அப்பொழுதுதான், 'வானொலி' கேட்க வந்தான். வீட்டில் யார் இருந்தாலும் சூடாமணி வந்து 'வானொலி' கேட்டுக் கொண்டிருப்பான். அவனது அடக்கமான குணம், அந்த வீட்டில் அவனுக்கு அவ்வளவு உரிமையைக் கொடுத்திருந்தது,

சூடாமணி கதவைத் தட்டினான்

"யார....து!"—இனிய குரல் கொஞ்சம் பலமாகக் கேட்டது.

"ஏன் ....?"

காவேரி கதவைத் திறந்தாள், சூடாமணி நின்றான். காவேரியை வெட்கம் பற்றியது. அவள் முகம் சிவந்தது; மின்னலென மறைந்தாள்! இரண்டாம் அறையில் தான் வானொலி இருந்தது. சூடாமணி கதவைத் தாழிட்டு விட்டு அறையில் வந்து வானொலியைத் திருகினான்.

சிறிது நேரங்கழித்து......

தனித்த நிலையில் சூடாமணியின் மனம் சிறிது சிறிதாகப் பின்னமடைந்தது. அவன் உள்ளம் பலமாக அடித்துக்கொண்டது. அவனுக்குத் தாகம் எடுத்தது; அந்த அறையில் ஒரு ஜன்னல்; அதற்கு எதிரே அடுக்களை.

அடுக்களைக்குள் அப்பொழுது தான் காவேரி நுழைந்தாள், சூடாமணி வானொலியின் சப்தத்தைக் கொஞ்சம் குறைத்து, "கொஞ்சம் தண்ணீர் வேண்டும்" என்று யாரையோ கேட்பது போலக் கேட்டான்.

அவனை பயமும் வெட்கமும் அமுக்கியது போலவே அவளையும் அமுக்கிற்று.பதில்சொல்லாமல் டம்ளரை எடுத்துத் தண்ணீர் கொண்டு வந்தாள்.

அவளுக்கு அந்த அனுபவம் புதிது.

டம்ளரை வாங்கி தண்ணீரைக் குடிக்க ஆரம்பித்தான். குடித்து முடிக்கும் வரை அவள் நிற்பாள் என்று நினைத்தான், இல்லை அவள் போய்விட்டாள்.

காவேரி திரும்ப அடுக்களைக்குள் நுழைந்தாள். இன்னும் அவளுடன் ஏதாவது பேசவேண்டும் என்று சூடாமணிக்குத் தோன்றிற்று.

"இதோ! டம்....ள...ரை..."

முடிக்கவில்லை. வார்த்தைக்கு, வார்த்தை சுதி குறைந்தது. காவேரி வந்தாள். அவன் எதிர் பார்த்தது வீண்போகவில்லை.

"இன்னும் கொஞ்சம் வேண்டுமா?"

அவனுக்குத் தாகம் இல்லை, என்றாலும் வேண்டுமென்று தலையசைத்தான்.

தண்ணீர் வந்தது.

குடிக்க ஆரம்பித்தான், அவள் போகவில்லை. அண்ணாந்து குடித்த வண்ணம் அரைக் கண்ணால் அவளைப் பார்த்தான். அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். கையில் டம்ளரை வைத்துக்கொண்டு,வலிந்து ஒரு புன்முறுவல் செய்தான். அவள் தலையைக் குனிந்து, கதவைப் பிடித்த வண்ணம் மெல்ல நகைத்தாள்,

வானொலி பாடிற்று.

சேர்த்துக் கட்டிய முல்லை
வேண்டுமென்றேன்—நல்ல
சேயிழையவள் சிரிப்பு முல்லை
தந்தாள்!

ஓய்ந்த நேரத்தில், சாய்ந்திருக்கையில், புரட்சிக் கவிஞனின் உள்ளத்தே ஊறிய அந்தப் பாடல், அந்த இளம் ஜோடியை இணைத்துக்காட்டிற்று.

* * *

சின்னாட் கழித்து..........

காவேரிக்குக் கல்யாணம். அந்த மாடப் புருவைத் தட்டிக் கொண்டு போக வேறொரு மன்மதன் வந்து விட்டான். காவேரியைக் கவலை மேய்ந்தது. அவள் உள்ளத்தில் தோன்றிய சமாதியின் மேல் "இதில் காவேரியின் இன்பக் கனவுகள் அடங்கியிருக்கின்றன" என்று கண்டிருந்தது. காவேரி மறைவிடத்து நின்று அழுதாள். கண்ணீர் செலவழிந்தது. கையைப் பிசைந்தாள், கைவலித்தது. திகைத்தாள்; மயக்கம்தான் வந்தது. திருமணம் என்னவோ, பக்கத்து ஊர்ப் பணக்காரர் நாராயணனுக்கும் அவளுக்கும் நடக்கத் தான் போகிறது!

சூடாமணியின் நிலை, கூர் வாளின்மேல் அன்ன நடைதான். 'அர்ஜண்ட்' சலவைக்குப்போட்டு வாங்கி வெள்ளையாக உடையணிதல், அழுக்கு இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஆயிரம் தடவை முகம் கழுவல். படித்தாலும் படிக்காவிட்டாலும் கையில் ஒரு ஆங்கிலப் புத்தகத்தை வைத்துக்கொள்ளுதல், வேளைக்குச் சாப்பிட்டுவிட்டுக் காவேரி வீட்டை முற்றுகையிடல், அவளது நடை உடை பேச்சிலே ஆத்ம திருப்தியடைதல்—இவை போன்ற நிகழ்ச்சிகளெல்லாம் இறந்தகாலமாகி, சூடாமணியை வலம்வந்து வணங்கி விடைபெற்றன.

அன்றுமாலை......

சூடாமணி பெருந்தவறு செய்யப்போகிறான். அவன் வாழ்க்கையிலே அடைந்த முதல் தோல்வியால் அந்தத் தவறு ஏற்படப் போகிறது. கசப்பின் அழுத்தலால் அவன் ஊரை விட்டே ஓடிவிடப் போகிறான். அதற்கு வேண்டிய பணத்தைப் பெற்றோரிடம் கேட்டால் காரணம் கூறியே தீரவேண்டும். அதற்காக அவன் பொய் சொல்லவேண்டும். சூடாமணி அதை விரும்பவில்லை. அன்னை குளிக்கச் சென்று விட்டாள். தந்தை வெளித் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். சூடாமணி அறையினுள் நுழைந்தான். அன்னை இறுகச் சேர்த்து, ஜாடியில் போட்டு வைத்திருந்த நூற்றுப் பதினேழு ரூபா, காலணாவைத் தடவி எடுத்துப் பையில் போட்டுக்கொண்டான்.

வெளியில் வந்தான்......நடந்தான்; எங்கேயோ போய்விட்டான்!

காவேரி நினைவுலகத்துக்கு வந்தபோது, நாராயணன் உள்ளே நுழைந்தார். காவேரி எழுந்தாள். நாராயணன் சட்டையைக் கழற்றிக்கொண்டே மெல்லப் பாடினார்,

'சேர்த்துக் கட்டிய'—

காவேரிக்கு இயல்பாய் உண்டாகாத, காரணம் தெரியாத அதிர்ச்சி மீண்டும் ஏற்பட்டது.

"காவல் மீறிக் கடைக்கு வந்து
விழுந்து—பலர்
கண்பட்டதால் வாடிய மருக்
கொழுந்து"

—பாடிக்கொண்டே இடையில் பேசினார்.

[8-ம் பக்கம் பார்க்க]

சுற்றிச்சுற்றி வட்டமிட்ட மனு!

பிரிட்டனில் ஒரு இடத்தில் பலமாய்த் தற்காப்புச் செய்வதற்காக அங்கிருந்த ஜனங்களுக்கு ஒரு எஃகுத் தகடு வேண்டியிருந்ததாம். இதற்காக அவர்கள் லைசென்ஸ் வேண்டி, சப்ளை மந்திரி இலாகாவுக்கு ஒரு மனு அனுப்பினார்கள். 'உள் நாட்டுப் பாதுகாப்பு மந்திரி இலாகாவுக்கு எழுதுங்கள்' என்று இதற்குப் பதில் வந்தது. இந்த இலாகாவுக்கு மனுவை அனுப்பினார்கள் அந்த நகரத்தார். 'யுத்த மந்திரி இலாக்காவிலுள்ள, கோட்டை கொத்தள டைரக்டருக்கு எழுதவும்' என்று பதில் கிடைத்தது. மீண்டும் அந்த டைரக்டருக்கு மனு அனுப்பப்பட்டது. 'மேற்குப் போர்முனைச் சேனாதிபதிக்கு எழுதவும்' என்று அவர் பதில் தந்தார். நகர ஜனங்கள் அப்படியே மனுவைச் சேனாதிபதிக்கு அனுப்பினார்கள். 'சப்ளை மந்திரி இலாகாவுக்கு எழுதவும்' என்று சொல்லி, மனுவை அவர் திருப்பிவிட்டார்! மனு இப்படியாகப் பத்துமாத காலம் வட்டமிட்டு, ஆரம்பித்த இலாகாவுக்கே கடைசியில் வந்து சேர்ந்தது. ஆனால், முடிவுமட்டும் ஒன்றும் ஏற்படவில்லையாம்! இதுதான் 'சிவப்பு நாடா' என்று சொல்லப்படும் அந்தத் தர்பார்.

மாஸ்கோவா?

பன்மொழிப்புலவர்,
கா. அப்பாத்துரை,
எம்.ஏ.,எல்.டி., (விசாரத்)

மாஸ்கோவின் குறிக்கோள் மாண்புடையது, மாஸ்கோக் கட்சி அதைக் காணுமுன், மாஸ்கோக் கட்சி என்று ஒரு கட்சி பிறக்குமுன், அதைக் கண்டது ஈரோடு. அதில் புதுத்திட்டம் வகுத்து முன்னேறுவது காஞ்சீபுரம். மாஸ்கோக் கட்சி அதை இன்னும் தெளிவாகக் காணவில்லை—ஈரோடு கண்டுள்ளது—காஞ்சீபுரம் கண்டு அத்திசையில் வேகமாக முன்னேறிச் செல்கிறது. ஈரோடுதான் அதைத் தமிழகத்துக்குக் காட்டி: கீழ்நாட்டில் ஒருபுதிய அறிவுப்புரட்சிக்கு வித்திட்டது. காஞ்சீபுரம் அதற்கு நீரூற்றி உரம் தந்து அதை வளர்க்க முனைந்துள்ளது. மாஸ்கோக் கட்சி பெயரளவில் தான் மாஸ்கோக் கட்சி. அது மாஸ்கோவின் குறிக்கோளுக்குப் புது வாழ்வு வகுப்பதைவிட, அதன் புகழை வளர்ப்பதைவிட, மாஸ்கோவின் புகழைத் தனதாக்கிக்கொள்ள மட்டுமே பாடுபடுகிறது. மாஸ்கோவின் குறிக்கோளை நன்கறிய வேண்டுமானால் மாஸ்கோவையே, மாஸ்கோ வழியின் வரலாற்றையே நன்குணர வேண்டும். மாஸ்கோவின் பெயர் சொன்னால் போதாது. திராவிட இயக்கம் ஈரோட்டில் தலைக் காவிரியாகத் தொடங்கிய போதே அவற்றை நன்கறிந்து கொண்டது. காஞ்சிபுரத்தில் அது அகண்ட காவிரியாகப் பெருகிய போது, அதனை அறிந்துகொண்டதுடன் நில்லாது அறிவிக்க, அறிவிப்பதுடன் நில்லாது, புதிதாக வகுக்க, வளர்க்க வல்லதாகியுள்ளது. ஈரோடு திசை காட்ட, காஞ்சிபுரம் வழிவகுத்துத் திட்டம் தீட்டித்தர, தமிழகம் அதில் முன்னேறி வருகிறது.

மாஸ்கோக் குறிக்கோள் மாஸ்கோவிலேயே பிறந்ததல்ல, ரஷ்யாவில் பிறந்ததுமல்ல. இங்கிலாந்து நாட்டின் அறிஞர்களிடையே அது தென்றலாகத் தோன்றி, பிரஞ்சு நாட்டில் சமூக அறிவுப் புரட்சியாக வீசிற்று. அது கனலாய் எரிந்தது பாரிசில், பிரஞ்சுப் புரட்சியாக. ஆனால் பிரஞ்சுப் புரட்சி அந்நாளில் பாரிசின் புரட்சியாகவோ, பிரான்சு நாட்டின் புரட்சியாகவோ மட்டும் நின்றுவிடவில்லை. அது பிரான்சில் நடைபெற்ற ஒரு சிறிய அறிவுலகப் புரட்சியாகவே இருந்தது. ஆனால் அதன் ஒளி பெரிதானாலும் அது ஒரு மின்னலொளி. மத இருளைக் கிழித்து, அது கண் கூசவைக்கும் எழில் காட்டிற்று. முதலாளித்துவ அரசியல் என்னும் முள் காட்டை அது எல்லாரும் காணவைத்தது. சமுதாய பேதத்தின் மீது அது சீற்றம் உண்டாக்கிற்று. ஆனால் மின்னொளி நீங்கிற்று, பழய பேதங்கள் நீங்கவில்லை. புத்தறிவு பிறந்தது, புத்தொளி நீடிக்கவில்லை. புரட்சி பிரான்சிலேயே நீடித்து வளரவில்லை. புரட்சியின் வேகம் வித்தூன்றி வளரப் புது நிலம், புதுப்புலம் நாடிற்று. ஜெர்மனியில் அது புது வடிவம் பெற்றது. கருத்துப் புரட்சியின் தோல்வியினின்று அது புதிய பொருளாதார அரசியல் திட்டமாக, புதிய உலகப் புரட்சிக்கு வித்தாக உருவாயிற்று. அது பின்னும் அறிவுரம், அனுபவ உரம் பெற்றது. கார்ல் மார்க்ஸின் வறுமைப் புயலிடையே அறிஞர் அண்ணாவின் புத்தறிவுத் திட்டங்கள் போன்ற புதிய திட்டம் உருவாயிற்று. ஆனால் ஜெர்மனி இப்புதிய திட்டத்தைக் கருதிக்கொண்டதேதவிர, அதைக் கருவுயிர்த்துப் புத்துயிர் காணவில்லை. காரல் மார்க்ஸ் என்ற கரு ஜெர்மனியில் ஒரு காயாய் விழுந்தது.

காரல் மார்க்ஸின் கனவுத் திட்டத்தை ரஷ்யா—லெனின்—ட்ராட்ஸ்கி—ஸ்டாலின் ஆகிய மூவரும் மும்முறையில் வகுத்த வழி நின்று—புதிய அரசியலின் திட்டமாக, புதிய உலக அரசியலின் ஒரு கடைகாலாக ஆக்கித் தந்தது.

மாஸ்கோவைப் பின்பற்றி வெற்றிப் பாதை கண்ட மற்றொரு பெரு நாடு செஞ்சீனா. மாஸ்கோ இங்கிலாந்தின் கருத்துப் புரட்சியையோ, பிரான்சின் அறிவுப் புரட்சியையோ அப்படியே பின் பற்றாமல்—கார்ல் மார்க்ஸின் அடிப்படையைக்கூட அப்படியே பார்த்துப் பகர்த்தெழுதாமல்—தம், கால இடசூழ்நிலைகளுக்கு ஏற்றபடி அவற்றில் மாறுபாடு செய்து புதுப் பாதை வகுத்துக்கொண்டதைப் போல, செஞ்சீனாவும் மாஸ்கோவை அப்படியே பின்பற்றாமல், தனக்கென ஒரு தனிப்பாதை வகுத்துக் கொண்டுள்ளது. நாம் முந்திய கட்டுரையில் எடுத்துக் காட்டிய மா-சே-துங்கின் விளக்கமே இதைத் தெளிவுபட நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்தத்தக்கது. தெளிவுபடுத்தும் முறையில் அதை இங்கே மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறோம்.

“சீனாவின் புதிய ஜனநாயகக் குடியரசு மேலைநாட்டு வகை முறையைச் சேர்ந்த முதலாளித்துவக் குடியரசினின்றும் வேறுபட்டது, அதே சமயம் அது தொழிலாளி வர்க்கத்தினால் ஆளப்பட்டு வரும் புத்தம் புதிதான சோவியத் வகை முறையைச் சேர்ந்த சமதர்மக் குடியரசிலிருந்தும் வேறுபட்டதேயாகும்!

இதுபோலத்தான் நாமும்’ ஈரோட்டுப் பாதையைச் செப்பம் செய்து காஞ்சிபுரப்பாதை வகுத்துக் கொண்ட நாமும் கூறுகிறோம்—மற்ற நாட்டுத் தோழமைப்புரட்சியியக்கங்களை நாம் போற்றுகிறோம் — அவற்றின் சாதனைகளை. படிப்பினைகளை, அனுபவங்களை மேற்கொள்கிறோம்—ஆனால் மாஸ்கோ தன் பாதையை மாஸ்கோ மண்ணிலேயே வகுத்துக் கொண்டது போல, செஞ்சீனா தன் பாதையைச் சீன மண்ணில் வகுத்துக் கொண்டது போல, நாமும் திராவிட நாட்டின் புத்தம்புதிய சமதர்ம திட்டத்தைத் திராவிட மண்ணிலேயே வகுத்துக் கொள்வோம்— உலகத்தின் மிக மிகப் பழமையான-கங்கை சிந்து ஆறுகள் பிறப்பதற்குமுன், இமயமலை உருவாவதற்கு முன் தோன்றிய பழமை வாய்ந்த, உறுதியான கட்டமைப்புடைய திராவிடத் தாயகப் பாதையிலேயே—ஆனால் திராவிடத்தின் தற்காலச் சூழ்நிலையையும் அதன் காலங் கடந்த பழம் பண்பையும் அதன் வருங்கால வளர்ச்சியையும் மனத்தில் கொண்டு புதிய உலகக் கோட்டை அமைப்போம் என்று தான் நாம் கூறுகிறோம். அதில் மந்த மதியினர் குறை காணலாம். மாஸ்கோ நிழல்கள் குற்றங் கூறலாம். ஆனால் மாஸ்கோ—செஞ்சீனா இப் புதிய புரட்சி நறுமலரை ஆர்வத்துடன் உற்றுநோக்கி அன்புடன் அணைக்கும் என்பது உறுதி.

சென்னையில் நடைபெற்ற மாநில மாநாட்டில் மாஸ்கோ நிழலின் பிரதிநிதியையும் அருகே வைத்துக் கொண்டு நம் அண்ணா அவர்கள் கூறியது போல, மாஸ்கோ பெயரை யார் வேண்டுமானாலும் பயன் படுத்திக் கொள்ளலாம், ஆனால் மாஸ்கோ மதிக்கும் — பாராட்டும் — மெச்சும் இயல்பாக வளரும் பண்பு, உரம், வளம் ஆற்றல் உடைய கட்சி—தமிழகத்தில் தோன்றி தென்கிழக்காசியாவெங்கும் புகழ் பரப்பவல்ல கட்சி—வருங்காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகமாகவே இருக்கும் என்பது உறுதி. அதன் விரைந்த வளர்ச்சி, சமுதாயப் பிரசாரத்தில் வேரூன்றி, மதம் மூடடையை ஒரு ஆட்டம் ஆட்டி, மொழியாதிக்கக்கோட்டான்களை விரட்டியடித்து, அரசியலின் அச்சாணியையே தன் அறிவுப் படைக்கு இலக்காக்கி வளர்ந்து வரும் தி. மு. க. வின் உலகம் காணா உயிர் வளர்ச்சி இதைமெய்ப்பித்துக் காட்டி வருகிறது.

பாரிஸ் விடிவெள்ளி—மாஸ்கோ செங்கதிரவன்—செஞ்சீனா தளிர் கதிர்—இந்த வளர்ச்சிப் படிகள் மேலையுலகினின்று தோன்றிய சமதர்ம இயக்கத்தின் மூன்று படிகள். இந்த மூன்றுபடிகளும் இப்போது புதிய திசையிலிருந்து திரும்பப் படிக்கப்படுகின்றன. ஈரோடு விடிவெள்ளி—காஞ்சிபுரம் செங்கதிரவன் — காஞ்சிபுரப் பாதையிலிருந்து ஒளி பெற்றுக் கலைத்துறை மூலம் மக்கள் மூளையில், நெஞ்சில், சமூக, குடும்ப வாழ்வில், சிந்தனையில், அவர் ஆர்வங்களில் புத்தறிவும் புத்தார்வமும் ஊட்டி வரும் தம்பிமார்கள் எண்ணற்ற தளிர் கதிர் நிலவொளிகள். மேலை உலகு சமதர்மப் பாதையில் மூன்று அடி எடுத்து வைக்க இருநூறு ஆண்டுகளுக்கு மேலாயின. தமிழகம் அதே மூன்று படிகளை ஒரு தலைமுறைக்குள்—இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் கண்டு விட்டது. நாம் போகும் சமதர்ம நெறியின் வெகம் இது.

மாஸ்கோப்புரட்சிக்குஇல்லாத தனிச் சிறப்புடைய நல் வாய்ப்புக்கள் தமிழகத்துக்கு உண்டு. இந்த நாட்டு மக்கள் உள்ளத்தின் ஆழத்தில் தமிழ்ப்பண்பு உண்டு; தமிழினப் பண்பு அதாவது திராவிடப் பண்பு உண்டு. அதன் உயிர் நாடியைக் கண்டுபிடித்து, அதன் உயிர்ப் பண்பைத் தட்டி எழுப்பி விட, தமிழ்க் கலை, திராவிடக்கலை நம்மிடம் உண்டு. அதுவே திருவள்ளுவர் திருக்குறளும் சங்க இலக்கியங்களும் இவற்றுக்கு அரண் செய்யும் பண்டை தமிழர் முழுமுதல் நூலாகிய தொல்காப்பியமும் ஆகும். மேற்குகளில் இருநூறு ஆண்டுகளில் வளர்ந்த சமதர்மக் கோட்பாடு தமிழகத்தில் கால் நூறு ஆண்டில் வளர்ந்துவிட்டதில் ஏதாவது மறைபுதிர் இருக்குமேயானால் அது இதுவேயாகும். பொதுவுடைமைக் கருத்துக்கு நேற்று வளர்ந்த மேனாட்டு நாகரீக மண்ணைவிட உலகின் மிகப் பழமையான திராவிட மண் தகுதி மிக்க வளமுடையது ஆகும். ஆனால் புரட்சிக்கு எந்த நாட்டுக்கும் இல்லாத வாய்ப்புத் தமிழகத்துக்கு இருப்பது

காஞ்சீபுரமா?



போலவே, எந்த நாட்டுக்கும் இல்லாத இடையூறுகள், தடங்கல்கள் இங்கே உண்டு. முதலாளித்துவத்தின் பொருளதாரப் பிடி ஒன்றுதான் மற்ற நாடுகளில் சமதர்மத்துக்குத் தடையாக உள்ளது. சமுதாய பேதங்கள், மூடப்பழக்க வழக்கங்கள் எல்லா நாடுகளிலும் சில்லரை அளவில் இருந்தாலும், முதலாளித்துவ நாகரீக காலத்திலேயே அவற்றின் கோரக் கொடுமைகள் பெரிதும் குறைந்து விட்டன. ஆனால் திராவிடத்திலோ திருவள்ளுவரின் அறிவொளிக்கு எதிராக அவை வளர்க்கப்பட்டுள்ளன. அவற்றை வளர்க்கும் புராண இதிகாச மடமைகளுக்கு வக்காலத்து வாங்கும் கம்பராமாயணம் நம்மிடம் உண்டு. அதன் பின்னணியிலிருந்து சூழ்ச்சிக் கயிற்றை இழுக்கும் புராண இதிகாச வர்ணாசிரமச் சழக்கர்கள் இன்னும் அரசியலின் பிடியையும் மக்கள் சமுதாயத்தில் தமிழுக்கும் மற்ற நாட்டுத் தாய்மொழிகளுக்கும் எதிராய், எம் மொழிகளின் வாழ்விலும் அவற்றின் மக்கள் வாழ்விலும் புகுந்து, அவற்றின் நாடி நரம்புகளிலும் குருதி நாளங்களிலும் தன் நஞ்சைப்பரப்பி அவற்றைக் கொல்லாமல் கொன்று வதைத்து வரும் 'செத்த வட மொழி'—'பிற மொழிகளைச் சாகடித்துவரும் வடமொழி' உண்டு. திராவிட இயக்கம் புதிய பகுத்தறிவுப் படைக் கலங்களுடன் பழய திராவிட இலக்கியமாகிய கேடயத்தையும் கைக் கொண்டு இவற்றுடன் போராடித் தான் முன்னேற்றப் பாதையின் ஒவ்வொரு அங்குலத்திலும் அடியெடுத்து வைக்க முடியும், நாம் மேனாடுகளை விட எளிதில் சமதர்மம் வகுக்க முடிந்தாலும், திருக்குறளையும் சங்க இலக்கியங்களையும் வைத்துக் கொண்டிருந்தும் இரண்டாயிரம் ஆண்டுகள் நல்ல முதலாளித்துவ நாடுகள் கூடக் கண்டு நகைக்க தக்க நிலையில் இருந்து வருவதற்குக் காரணம் திராவிடத்தைச் சூழ்ந்து உயிரை இறுக்கி வரும் முதலாளித்துவத்திலும் கொடுமை வாய்ந்த இந்த ஆரியப் பேய்க்கு நாம் அடிமைப்பட்டிருப்பதேயாகும்.

தென்னாட்டின் உண்மைப் பொதுவுடமை இயக்கமாக திராவிட இயக்கத்திற்கும், போலிப் பொதுடைமை இயக்கமான மாஸ்கோ நிழலுக்கும் உள்ள வேற்றுமைகள் இரண்டே இரண்டு தான்—கார்ல் மார்க்ஸின் புகழுக்கும் மாஸ்கோவின் புகழுக்கும் உதவியாக நாம் திருவள்ளுவரையும் சங்க இலக்கியத்தையும் துணைக் கொண்டு, முடியுமானால் மாஸ்கோ தாண்டி, வளர முனைகிறோம். ஆனால் அவர்கள் மாஸ்கோப் பாடத்தைத் திருப்பிப் படித்துக் கொண்டு, ஆரியச் சின்னத்தை மட்டும் நீக்கிய ஆரியத்தை அணைத்துக் கொண்டு இந்த வழியைப் பின் பற்றத் தயங்குகிறார்கள். அது மட்டுமல்ல. தமிழகத்தையும் தென்னாட்டையும் திருவள்ளுவர் நெறியிலிருந்தும் சங்க இலக்கிய வளத்திலிருந்தும் கீழே இழுத்து வரும் சக்திகளுடன் இவர்கள் மறைமுகமாக ஒப்பந்தம் செய்து கொண்டு, அவர்களது கம்பராமாயணக் கொடியை உயர்த்திப் பிற்போக்குச் சக்திகளை வளர்க்கப்பாடுபடுகிறார்கள். 'தேசீயம்' என்ற பெயருக்குத்தாம் குத்தகை எடுத்துக்கொண்டு, நாட்டுக்கு உழைக்கும் நல்லறிஞர்களையும் சீர்திருத்தத் தொண்டர்களையும் நாஸ்திகர்கள், வகுப்புவாதிகள், தேசத்துரோகிகள், சினிமாக்காரர்கள் என்று திட்டும் பல காங்கிரஸ்காரர்களைப்போல, 'முற்போக்கு' என்ற தொடரைத் தமக்கு மட்டும் குத்தகையாகக் கொண்டு, நாட்டை உண்மைச் சமதர்மப் பூங்காவாக்கும் நற்பணியில் ஈடுபட்ட தமிழ் நன்மக்களை அவர்கள் எதிர்க்க—பின்னின்று தாக்க முனைந்து வருகின்றனர். காங்கிரசிலுள்ள பிற்போக்குச் சக்திகளை எதிர்க்க நம்முடன் உறவு கொள்ள வந்ததாகக் கூறிய அவர்கள் காங்கிரசைவிடப் பிற்போக்கானவர்களுடன் சேர்ந்து 'முற்பேர்க்கு'ப் பூச்சுப் பூசிய பிற்போக்காளர்களாகக் காட்சியளிக்கத் தொடங்கியுள்ளனர்.

குறிக்கோளைக் காட்டித் திராவிட இயக்கத்தை அவர்கள் கண்காட்டிய காலம் உண்டு. நாம் குறிக்கோளில் கொண்ட காதலால் சில காலம் அவர்களுடன் இணைந்து உழைக்கலாம் என்று நினைத்தோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் அறிவார்த்த வழிகாட்டியான அண்ணாவும் தம் காதல் துணைவரை ஆராயாது தேர்ந்தெடுத்துக் கொள்பவரல்ல. ஆளுக்கு ஆள் நிறம் வேறுபடலாம், தோற்றம் வேறுபடலாம், பண்பு ஒத்து வரவேண்டும். இந்த உரை கல்லைத்தான் நாம் பயன்படுத்தி உண்மை கண்டோம், திராவிடர் அனைவருக்கும் உண்மை காட்டினோம். திராவிட நாட்டைச் சமதர்மச் சோலையாக்க நாம் பாடுபடுகிறோம். அவர்களும் சமதர்மச் சோலை அமைக்கப் பாடுபடுவதாகக் கூறினர். ஆகவே நம்முடன் நிற்பார்களா என்று உறுதியாய் அறிய, திராவிட நாட்டுக் குறிக்கோளை முன் வைத்தோம். மா-சே-துங்கினிடமோ ஸ்டாலினிடமோ இதே குறிக்கோளை முன் வைத்தோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்ன கூறியிருப்பார்கள். 'உங்கள் சமதர்மப் பூங்கா எண்ணூறு மைல் நீளந்தான் உள்ளது. ஆயிரத்தைந்நூறு மைல் நீளம் இல்லை. ஐந்து மொழிகள்தான் இருக்கின்றன. ஐம்பது மொழிகள் இல்லை. ஆகவே உங்கள் திராவிட நாட்டுக் குறிக்கோளை நாங்கள் ஒத்துக்கொள்ள மாட்டோம்'' என்று கூறுவார்கள்? ஒருநாளும் மாட்டார்கள். நேர்மாறாக, இடக் குறுக்கமும் எல்லைக் குறுக்கமும் இங்கே மொழி வேறுபாடு, இன வேறுபாடு, பண்பாட்டு வேறுபாடு ஆகிய தேசீய அடிப்படையில் செய்யப்பட்டது என்பதை அவர்கள் தெளிவாக உணர்வார்கள். இந்தியாவைப் பற்றிக் கார்ல் மார்க்ஸ் கூறிய உண்மைகளை மாஸ்கோ நிழல்கள் கவனித்திருக்காவிட்டாலும் அவர்கள் கட்டாயம் கவனித்திருப்பார்கள். ஆகவே இடக் குறுக்கம் தேசீய அடிப்படை உடையது மட்டுமல்ல. சமதர்ம போராட்டத்துக்கும் பெரிதும் உதவுவது என்று கண்டிருப்பார்கள். இந்தியாவில் ஆரியம் ஆதிக்கம் செலுத்துகிறது. பொதுவுடமை அமைக்கப்பட்டாலும் கூட, மேனாட்டு முதலாளித்துவத்தைவிடப் பிற்போக்கான ஆரிய அடிப்படையை அசைக்காமலே அது எழுப்பப்படும். உண்மைப் பொதுவுடமைவாதிகள், பகுத்தறிவாளர்கள் இதை நல்ல முதலாளித்துவத்தைவிடக் கேடானது என்று கூறத் தயங்கமாட்டார்கள். பொதுவுடமைக் குறிக்கோளையே பற்றி நிற்பதாகக் கூறும் மாஸ்கோ நிழல்கள் இதை ஏன் காணவில்லை, அல்லது கண்டால் ஏன் காணாதவர்கள் போல நடிக்கிறார்கள் என்பதை நாம் அறிய முடியவில்லை. வேண்டுமானால் 'இந்தியா' 'பாரதம்' ஆகியவற்றில் உள்ள பாசம்தான் 'பொதுவுடமை' ஒளிபெற்ற நம்மிடமிருந்து அவர்களை மறைக்கிறது என்று கூறலாம்.

தேசீய இனங்களின் அடிப்படையை சோவியத் அரசியல் ஒத்துக் கொண்டுள்ளது. இதை யாவரும் அறிவர். ஆகவே திராவிட இன அடிப்படையில் திராவிட நாடும், இனப்பண்பு அடிப்படையில் சமதர்மமும் விரும்பும் ஒரு இயக்கத்தை மாஸ்கோவே ஆதரிக்கத் தடை ஏதும் இருக்க முடியாது. 'மாஸ்கோ நிழல்கள்' தேசீய இன அடிப்படையில் சமதர்ம திராவிடம் அமைவதை எதிர்க்க முனைவதானால், அவர்கள் மாஸ்கோ கடந்து நேரே கார்ல் மார்க்ஸுக்குச் செல்ல வேண்டும். தேசீய இனங்களையே ஒத்துக்கொள்ளாத உலக சமதர்ம அரசுபற்றிப் பேசவேண்டும். ஆனால் அப்படிப் பேசுவதாகக் காணோம். நேர்மாறாக அவர்கள் இந்திய தேசீய இனத்தை ஒத்துக்கொண்டு, அதன் பிற்பேர்க்கு—ஏகாதிபத்தியப் பிடிய்ய வலுப்படுத்தவே பார்க்கிறார்கள். 'ஏக இந்தியாவில்' காங்கிரஸ்காரர்களுக்கு இருக்கும் பற்றைவிட, மாஸ்கோ நிழல்களுக்கு மிகுதியான பற்று இருந்து வருகின்றது. அவர்கள் பொருளாதார முற்போக்குப் பேசி, இந்தியாவின் சமுதாய அறிவுத் துறைகளில் பகுத்தறிவுக்கு எதிரான பிற்போக்குக் கும்பல்களின் பிடியை வலுப்படுத்தவே முயற்சிக்கின்றனர் என்பது தெளிவு.

தென்னாட்டவர் தமிழர், பின்பற்ற வேண்டுவது மாஸ்கோப் பாதையா, காஞ்சீபுரப் பாதையையா என்று இப்போது கட்சி சார்பற்ற எவரும் காண்பது எளிது. மாஸ்கோ பாதை என்பது மாஸ்கோவின் நிழல் மட்டும் தான். அந்த நிழலும் உண்மையில் மாஸ்கோவின் நிழலல்ல. அந்த நிழலுக்குள் டில்லியின் வாடைதான் பெரிதும் தட்டுகிறது. அது மாஸ்கோவின் போர்வை போர்த்த பாரதத்தின் புத்துருவம். புதுமையின் சாயம் தோய்த்த பழமையின் மாறாட்ட உருவம். முற்போக்குக் கொடியின்கீழ்த் திரண்ட பிற்போக்கு வடிவம். உண்மையில் மாஸ்கோவின் குறிக்கோளை மதித்து அதனுடன் தோழமைநாடும் 'தன் மதிப்புடைய தமிழர்கள்' பாதாள முறையை (அதாவது அண்டர் கிரவுண்ட் முறையை) என்றும் பின்பற்றாமல் ஒளிவு மறைவற்ற அண்ணாவின் நேர்மையைக் கைக்கொண்டவர்கள்; இராமனைப்போல் பின்னிருந்து தாக்காமல், தலை தந்தும் முன்னின்று தமிழ் காக்கும் வீரர்கள்; பலாத்காரப் புரட்சியில் முனையாமல் அண்ணாவின் அகிம்சை நெறியில் பொறுமையுடன் நின்று போராட எண்ணுபவர்கள்; வாய்ச்சொல்லில் கூட திட்டும் வசையும் எதிரியைப் புண்படுத்தும் நேரடித் தாக்குதலில் முனையாமல், அறிவு விளக்கம், நகைச்சுவை, கலைநயம், சொல்லினிமை ஆகியவற்றாலேயே வெற்றி நாடும் தோழர்கள் 'காஞ்சி'ப் பாதையையே 'காஞ்சன'ப் பாதையாகக் கொள்வர் என்பது உறுதி.

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

"இந்தப் பாட்டு உங்களுக்கும் தெரியுமா?" என்று கேட்டு வைத்தாள்,

"ஏன் உனக்கு மட்டுந்தான் தெரியுமோ?"

"நம்ம சூடாமணிக்கு இந்தப் பாட்டிலே பைத்தியம்! சும்மா பாடிக்கிட்டிருப்பான். சமயத்திலே அபிநயம் கூடப் பிடிச்சிடுவான்!"

'நம்ம சூடாமணி' என்று இருவருக்கும் பொதுவுடைமையாகக் கூறப்பட்ட அந்தச் சுடாமணி அவராக இருக்குமோ?

காவேரி கேட்டாள்; "யார் சூடாமணி?"

"உனக்குத் தெரியாதா? உன் பிறந்த ஊர்தானே? உனக்கெங்கே தெரிந்திருக்கப் போகிறது? நல்ல பையன். கொஞ்சம் கிறுக்கு. வீட்டை விட்டுச் சொல்லாமல் கிளம்பி விட்டான். இப்போ பட்டணத்திலே ஒரு பத்திரிகையிலே ஆசிரியராக இருக்கிருன்"—விசிறிய வண்ணம் சாந்தமாகச் சொன்ஞர் நாராயணன்.

காவேரி அதிகமாகக் குழம்பி விடவில்லை. "உங்களுக்கு ஒரு கடிதம் வந்திருக்கு" என்று சொல்லிக்கொண்டேநாராயணன் கையில் கடிதத்தைக்கொடுத்தாள்.

நாராயணன் கடிதத்தை உடைத்தார். உள்ளே இருந்து ஒரு புகைப் படம் விழுந்தது. எடுத்துப் பார்த்து விட்டுக் கடிதத்தைப் படித்தார். படித்து முடித்து விட்டு, 'சபாஷ்' என்ருர்.

"என்ன?" என்ருள் காவேரி.

"நம்ம சூடாமணி தான் எழுதியிருக்கிருன்" என்று சொல்லி விட்டுக் கடிதத்தைப் படித்தார், நாராயணன்.

அன்புள்ள அண்ணு!

நலம்.

அங்கு, தாங்களும் அண்ணியும் சுகம் என்று நம்புகிறேன்.

இந்த இடத்தில் காவேரியின் மூளை கொஞ்சம் வேலை செய்தது, 'அண்ணி!— இப்பொழுதும் உரிமையோடு தான் எழுதியிருக்கிருர்" என்று நினைத்தாள். கடிதத்தில் ஈடுபட்டாள்.

.......நான் இங்கேயே ஒரு பெண்ணைப் பதிவு மணம்செய்து கொண்டிருக்கிறேன். இனி நம் ஊர்ப்பக்கம் திரும்புவதில்லையென்ற உறுதிகொண்டு விட்டேன். மனைவியை அழைத்துக் கொண்டு நாளை மறு நாள் புதுச்சேரி வருகிறேன். பிற நேரில்.

நண்பன்,
சூடாமணி.

காவேரிக்கு உடம்பு காய்வது போல் பிரமை எழுந்தது.

* * *

"சூடாமணி! வா!......வாம்மா ....காவேரி! இங்கே!...உள்ளே போம்மா........காவேரி! கூட்டிக் கிட்டுப்போ!"

சூடாமணியையும் அவனது மனைவியையும் வரவேற்கும் போது நாராயணன் இப்படிப் பேசினர். காவேரி, சூடாமணியின் மனைவி சரோஜாவை அழைத்துக்கொண்டு உள்ளே சென்ருள். அவள் உள்ளத்தில் அன்பு கலந்த உற்சாகம் பெருக்கெடுத்தது.

அன்று மாலை நால்வரும் உட்கார்ந்து தேநீர் அருந்திக்கொண்டிருந்தார்கள். நாராயணன் சூடாமணியைப் பார்த்து "டேய் ஒரு பாட்டுப்பாடு! உன் பாட்டைக் கேட்டு ரொம்ப நாளாச்சு! உன் 'மாஸ்டர்பீஸ்' பாட்டையே பாடேன்!" என்ருர்.

எல்லோரும் அமைதியாக இருந்தார்கள். சூடாமணி 'கிண்' ணென்று குரல் எடுத்துப் பாடினன்.

'சேர்த்துக் கட்டிய முல்லை...' பாட்டு முடிந்தது.

"காவேரி எப்படிப் பாட்டு?" என்று கேட்டார் நாராயணன்.

"இதை நான் முன்பே கேட்டிருக்கிறேனே!" என்று காவேரி சொன்னுள்.

சூடாமணிக்கு விஷயம் விளங்கிற்று. நாராயணனும் சரோஜாவும் எதையோ நினைத்துக் கொண்டு களங்கமின்றிச் சிரித்தார்கள்! *

குழந்தை மலர்

— த. கோவேந்தன் —

தோயும் இரண்டுளத்தின்—கனவில்
சொக்கி மலர்ந்த மலர்!
பாயொளிக்கூட்டுறவில்—காதற்
பாட்டில் தவழ்ந்த மலர்!

முல்லை மலர்ச்சிரிப்பில்—அன்பன்
மோகனச்சந்திப்பிலே
நல்ல தமிழிசையாய்—காதல்
நாதத்தில் பூத்தமலர்!

கண்ணில் அமர்ந்த எதிற்—கனவில்
கண்டு எடுத்தமலர்!
மண்ணில் மகிழ்வூட்டும்—இரண்டு
மனங்கள் கண்டமலர்!

வாழ்வெனும் காவினிலே—காதல்
வளர்த்த எண்ணமலர்!
வீழும் இரண்டுளத்தின்—உள்ள
வீணையில் பூத்தமலர்!

வாழ்வார்க் கிவ்வானம்—விளைத்த
வானின் மழை போன்று
வீழ்வார்க்கு வீழ்வார்—அளித்த
வாழ்வின் அமிழ்தமலர்!

தென்றல்

பாரதி மலர்

—○—

★ அழகிய முகப்புடன், அருமையான கதை, கட்டுரைகள் நிறைந்தது.

★ பக்கத்திற்குப் பக்கம் படங்கள்.

★ கண்ணதாசன், பாரதிபற்றி எழுதும் கட்டுரை, கவிதை.

★ விலை அணு எட்டுத்தான். முன்பணம் அனுப்புபவருக்கே தரப்படும். வி. பி. கிடையாது.

தென்றல்

2, சண்முகமுதலி தெரு, சென்னை–14.

நூல் நயம்

'கவிஞனின் காதலி' என்று ஒரு கவிதைத் தொகுப்பு வந்துளளது. ஒவ்வொரு கவிதையும், "கம்பன் செத்தான்!" என்று கூருமல் கூறுகிறது! அவ்வளவு அழகிய தமிழ்! இதன் ஆசிரியர் பெயர் த. கோவேந்தன். ஏன் இவர் மக்கள் மத்தியிலே இன்னும் அளவு கடந்த செல்வாக்குப் பெறவில்லை என்றே கேட்கத் தோன்றுகிறது, கவிதைகளைப் படிக்கும்போது. (இவர், குழந்தை பற்றி, இந் நூலில் எழுதியிருக்கும் கவிதையை, நண்பர்கள் தென்றல் மூன்ருவது இதழில் சுவைத்திருப்பார்கள்.) அற்புதமான கற்பனைகள் அடுக்கடுக்காக விழுகின்றன. நாமக்கல் ராமலிங்கத்தைக் கவிஞர் என்று கூறுகிறவர்கள், இவர் கவிதைகளைப் படித்தால் மகாகவி, உன்னதமான கவி என்றெல்லாம் போற்ருமலிருக்க முடியாது! ஆனுல் ஒரு பெருங்குறை அருமையான அச்சில் வார்த்துங் கூட, மேல் அட்டையை விதவையின் கழுத்து மாதிரி ஆக்கி விட்டார்! இந்த நாளில் சேலையைப் பார்த்துத் தானே ஜோடியைத் தேர்ந்தெடுக்கிருர்கள்! மேலட்டை நன்ருக இருப்பதும் அவசியம் என்பதை, "தொழில் கண்ணேட்டத்தில்" நண்பர் உணர வேண்டும். இது கிடைக்கும் இடம்: கவிமனை, சைதாப்பேட்டை, வேலூர். (வ, ஆ.)

[விலை 0—10—0.]

கட்டபொம்மன்

வீரம் அவனுக்கு ஒரு விளையாட்டு, புள்ளி மானிடம் அல்ல புலிக்கூட்டத்திடம்! மானம் அவனது வேதாந்தம்—மரணம் கண்டு நிலைகெட்டழிபவனல்ல, காதல் கீதம் அவனது வாழ்க்கையின் நாதம்.......அதில் அவன் தவறியதில்லை. காதல் வீரம் இரண்டையும் இரு கண்களாக ஏற்றவர் தமிழ் நாட்டார்; ஏற்றது தமிழ் நாடு.

இந்த நாட்டில்தான் முடியுடை மூவேந்தர், ஆட்சி முடிவுற்ற காலத்திலே—முத்தமிழ் நாட்டில் குறுநில மன்னர் ஆட்சி தலை நீட்டிக் குறுநகை புரியத்தொடங்கிய நேரத்திலே ஆர்க்காட்டு நவாப் அனைவரையும் அடக்கியாளத் தொடங்கினன்.

அதனால் வரியும் வரவேற்பும்; வாழ்த்தும் வாழ்க்கையும் பெற்றன. குனிந்துகொண்டிருந்த குறு நில மன்னர்கள் வாள் வலியும் தோள் வலியும் பெற்று வாகை சூடத் தொடங்கினர். நாவாப்பின் அதிகாரம் நசிக்கத் தொடங்கியது; வரியும் வருமானமும் நின்றன. வரிப்பணம் வந்துசேரவில்லை. வாங்கும் வன்மை நவாப்பிற்கில்லை.

வெள்ளையரின் உதவியை வேண்டிச்சென்றான். அண்டிப் பிழைக்க ஆளில்லையே என்றிருந்த அவர்கள் தொண்டனைக் கண்டதும் துதி பாடத் தொடங்கினர். மார்க்ஸ் அதற்கு மார்க்கம் வகுத்தான். வெறி கொண்டு ஆடினர் வெள்ளையர்! கிளி கூண்டிற் கருகில் கொண்டு போகப்பட்டது. மார்க்ஸ் வெல்லின் கூடாரத்தில் நவாப் மதி மயங்கினன். ஏமாற்று வித்தையின் ஏகப்புத்திரர்கள்.........

காட்சி: 1.

[நங்கையொருத்தி நாட்டியமாடுகிறாள், மார்க்ஸ், ஆலன், நவாப் முதலியோர் ஆட்டங்கண்டு அகமகிழ்கின்றனர்.

பாட்டு (*புரட்சிக் கவிஞர்*)

ஓ...என் சகோதரரே ஒன்றுக்கும் அஞ்சாதீர்
நாவலந்தீவு நமைவிட்டுப் போகாது
வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்களென்றால்
சூழ்கின்ற பேதமும் அந்தத்தொகை யிருக்கும்.
ஆகையால் எல்லோரும் அங்கே தனித்தனிதான்
ஏகமனதாகியவர் நம்மை எதிர்ப்பதெங்கே
பேதம் வளர்க்கப் பெரும் பெரும் புராணங்கள்
சாதிச் சண்டை வளர்க்கத்தக்க இதிகாசங்கள்
தேகம் அழிந்து விடும் சுற்றத்தார் செத்திடுவார்
போகங்கள் வேண்டாம் பொருள்வேண்டாம்—மற்றுமிந்த
பாழுலகம் பொய்யே பரமபதம் போவென்னும்
தாழ்வகற்ற வெண்ணுங்கால் சாக்குருவி—வேதாந்தம்
சாதிப்பிரிவு சமயபிரிவுகளும்
நீதி பிழைகள் நியமப்பிழைகளும்
மூடப்பிழைகள் எல்லாம் முயற்சி செய்தே
ஓடச்செய்தால் நமையும் ஓடச் செய்வாரேன்பேன்....(ஓ....என்)

நாட்டியம் முடிகிறது.

உரையாடத் தொடங்குகின்றனர்,

காட்சி: 2.

(மார்ஸ் வெல் கூடாரம்)

[ஆலன் அருகில் அமர்ந்திருக்க மார்க்ஸ் நாவப் உரையாடுகின்றனர்.]

மார்க்ஸ்: *நவாப்! நாட்டியம் பார்த்தீர். நன்றாகத்தான் இருந்திருக்கும். எம்மை நாடி வந்த உமக்கு என்றும் நலம் புரிய வேண்டுமென்பது எமது ஆசை. ஆனால் நீரோ பிறரால் ஏமாற்றப்பட்டீர். கோட்டைகளைக் கட்டி நாட்டை யாள மனக் கோட்டை கட்டினர். அவையெல்லாம் எட்டுச் சுரக்காய் ஆனமைகண்டு வாட்ட முறுகின்றீர். ஆட்சி என்ற அழகுச் சொல் உமது வசம்; ஆதிக்கம் என்ற செயல் உம்மை அண்டிய பாளையக்காரர் வசம், வரியை விதிக்கின்றீர்; வாங்க வன்மையில்லை; ஆதிக்கம் செலுத்த ஆசைப்படுகின்றீர்; அடக்க ஆண்மையில்லை......ஏன்? அதிகப்படியான பலமும் இல்லை. ஆனாலும் ஒன்று மட்டும் கூறுகிறேன் கேளும்....வணிகம் செய்ய வந்த எங்களிடம் வரிவசூலிக்கும் பொறுப்பை விட்டுப்பாரும்! எங்கள் கெட்டிக்காரத்தனத்தையும், பாளையக்காரர் கொட்டம் மட்டம் தட்டப்படுவதையும், தெம்மாங்குபாடிக் கும்மாளம் அடிக்கும் அவர்களை.......*

நாவப்: *வாட்டி வதைத்து வரியை வாங்க வேண்டும். கெஞ்சினால் மிஞ்சும், மிஞ்சினால் கெஞ்சும் வஞ்சகப் பேய்கள். மார்க்ஸ் துரை அவர்களே, அரசன் என்ற அழகுப் பொம்மையாக மட்டும் நான் அமர்ந்தால் போதும். ஆதிக்கம்—அதிகாரம்—அடக்குமுறை அத்தனையும் உங்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன். எப்படியாவது கப்பம் கட்ட வேண்டும், என் வாயிலில் காத்துக் கிடக்க வேண்டும், பலம் படைத்தவர்கள் என்றெண்ணும் பாளையக்காரர்களின் ஆட்சியை பாழ்படுத்த வேண்டும்.*

மார்க்ஸ்: *ஆமாம், அதிருக்கட்டும். பாளையக்காரர்களெல்லாம் பரம்பரையாகப் பாராண்ட வேந்தர்களா? இல்லை பாதியில் வந்த பஞ்சைகளா?*

நவாப்: *பஞ்சைகள்தான். பஞ்சம் மிஞ்சிப் போகவே கெஞ்சி வந்த ஆந்திரர்க்குக் கஞ்சிக்கு, வழிகாட்டித் தஞ்சம் அளித்தான் செகவீர பாண்டியன். பாண்டியன் மரபில் பட்டம் சூடப் பெற்ற பிள்ளையில்லை. அதனால்தான்.......ஆந்திரப் பரதேசிகளில் ஒருவனுக்கு.........*

ஆலன்: *(சிரிப்பு) நவாப் நல்ல போடுபோட்டார். ஆந்திரர்கள் பரதேசிகளாம், வாழ்வதற்கு வழிதேடிப் புகுந்த வந்தேறிகளாம். (சிரித்தல்) இல்லை.......இல்லை.......இல்லவே இல்லை....... வாழ்வதற்காக வளமிகுந்த நாட்டைத் தேடிவந்த வந்தேறிகள் வாழ்கின்றார்கள். உண்மைதான், ஆனால்......ஆந்திரன் தமிழன், பேசுகின்ற மொழியினாலே அவன் தமிழன். பிறந்த இடத்தினாலே அவன் தமிழ் நாட்டான். நிறத்தாலே அவன் தமிழ் இனத்தான். வாழ்க்கை நெறியாலே அவன் தமிழ்ப் பண்பாளன்.*

காலத்தின் கோலத்திலே ஆரியம் புகுந்து அருந்தமிழ் நாட்டானை ஆந்திரனாக்கியது, கன்னடனாக்கியது...மலையாளியாக்கியது, அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து "நாம் அனைவரும் தமிழர். நமது இனம் தமிழினம்" என்பதை உணர்ந்து விட்டால் நாம் வாழ முடியாது, நம் போன்ற வந்தேறிகளும் வாழமுடியாது. அதையெல்லாம் உணராமல் நமக்காக ஏதேதோ நவாப் வாய்க்கு வந்தபடி உளறிக் கொட்டுகின்றார். பரவாயில்லை, மேலும் கூறும்.

நவாப்: *பட்டம் கட்டிப் பாராளும் மன்னனாக்கி மறைந்தான் ஜெகவிர பாண்டியன். பட்டத்திற்கு வந்த ஆந்திரன் தன் பந்து மித்திரர்களை அழைத்துப் பாளையக்காரர்களாக்கிப் பக்கத்துணையாக்கிக் கொண்டான். அந்த மட்டிகள் பட்டம் ஏற்றதும், சட்டங்களை அமைப்பதும், கப்பம் கட்ட மறுப்பதும்—எண்டிசைக் கட்டியாளக் கனவு காண்பதும்.......*

மார்க்ஸ்: *வெட்கமாய் இருக்கிறது உமது பேச்சைக் கேட்க, உமது திட்டத்தின்படி நீர் வகுத்த சட்டத்தை தட்டி நடந்த தலைவர்களை வெட்டி வீழ்த்த வேண்டும், வெடி மருந்துகளை வீச வேண்டும், வீண் சண்டைக்கு இழுக்க வேண்டும். இல்லாத பழிமொழிகளை இட்டுக் கட்டவேண்டும். சண்டையில் வெல்ல முடியாவிட்டால்........ சதித் திட்டம் தொடங்க வேண்டும்,*

நவாப்: *சதித்திட்டமா? எங்கள் சாதிக்கே அந்தப் பழக்கம் இல்லை. ஆனால் சண்டைக்கு மட்டும் என்றும் தயங்கமாட்டோம்,*

மார்க்ஸ்: *இந்த ஆங்கிலேயருக்கு எந்தத் துறையிலும் ஏகபோக உரிமையும் அனுபவமும் அதிகமாக உண்டு என்பதை.........*

நவாப்: *நன்றாக அறிவேன் துரையவர்களே நன்றாக அறிவேன்........சூழ்ச்சியின் சொந்தக்காரர்கள், தந்திரத்தின் தத்துப் புத்திரர்கள், சதியின் சகாக்கள் வஞ்சகத்திலே வளர்ந்தவர்கள் என்பதை நன்றாக அறிவேன் துரைகளே நன்றாக அறிதுவன்.*

மார்க்ஸ்: *அறிந்தும் அளவிற்கு மிஞ்சுடும் வரை..........ஏன்? விட்டு வைத்தீர்; கப்பங்கட்ட மறுத்த அந்தக் கணமே நீர் எம் காலில் வீழ்ந்திருந்தால்....கசக்கிப்பிழிந்திருப்போம் அந்தக் கயவர்களை.*

நவாப்: *ஆர......அமர..........ஆழ்ந்து.........ஆராய்ந்துதானே எதையும் ஆரம்பிக்க வேண்டும். அதனால் ஆராய்ந்து......*

மார்க்ஸ்: *ஆர்க்காட்டு நவாப், எது ஆராய்ச்சி செய்யும் அளவிற்கு.........*

நவாப்: *ஏதோ கொஞ்சம் அறிவும் இருக்கிறது......*

மார்க்ஸ்: *ஆனால் இப்போது அது பயன்படவில்லை என்கிறீர். ஏன் அப்படித்தானே! சரி, அதிருக்கட்டும், நீர் அரசனாகவாழ ஆசைப்படுகின்றீர்......ஆதிக்கம் செலுத்த அவசரப்படுகிறீர். அதற்காக ஆதிக்கத்தை எங்களிடம் ஒப்படைக்கின்றீர்......ஏன் அப்படித்தானே?*

நவாப்: *ஆமாம் துரைகளே ஆமாம்!*

மார்க்ஸ்: *நவாப்! உமது அதிகாரம் பேச்சளவில் ஒப்படைக்கப்பட்டால்......உமது பெருமையும் குறையும் எமது திறமையும் குறையும்.*

நவாப்: *வேறென்ன செய்யவேண்டும் துரைகளே, வேறென்ன செய்ய வேண்டும்........எதை வேண்டுமானாலும் செய்யலாம்........ ஏகபோகம் நமக்குத்தானே?*

(தொடரும்)

—சிலம்பின் செல்வன்

1

பொக்காஷியோ கதை

சூர்ராதோ என்பவன் ஒரு பிரபு. அவன் தன்னுடைய பிரதானமான காரியங்களைக் கவனித்துக் கொள்ளுவதுடன் வேட்டையாடுவதும் உண்டு. ஒருநாள் வேட்டையாடச் சென்று, ஒரு கொக்கைப் பிடித்துக்கொண்டு வந்தான். உடனே அதைத் தன் சமையல்காரனாகிய சிச்சிபோ என்பவனிடம் கொடுத்து, அதைப் பக்குவமாக வதக்கி, சாப்பிடும்போது பரிமாறும்படி சொன்னான். அவ்விதமே சிச்சிபோ அதை எடுத்துச் சென்று, வேகவைத்துக்கொண் டிருக்கும்போது, புரூனெட்டா, என்ற ஒரு இளம் பெண் அங்கே வந்தாள். அவள்மீது சிச்சிபோவுக்கு ஒரே பைத்தியம். புரூனெட்டா, சமையல்காரனைப் பார்த்து, "இந்தக் கொக்கின் துடை ஒன்றை எனக்குத் தின்னக் கொடு" என்று கேட்டாள். தன் எஜமானன் கோபிப்பானே என்ற பயத்தினால் சமையல்காரன் தயங்கினான். இதைக் கண்டதும் அவள் மிகவும் கோபப்பட்டு, "கொக்கின் துடையைத் தர உனக்கு இஷ்டம் இல்லை என்றால், இனிமேல் என் கிட்டத்திலேயே உன்னால் வரமுடியாது" என்று சொல்லிவிட்டாள். சமையல்காரனுக்கு வேறு வழி தோன்றவில்லை. அவள் கேட்டபடியே ஒரு துடையைக் கொடுத்துவிட்டான்.

அன்று இரவு பிரபுவும் அவனுடைய விருந்தினர்கள் சிலரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். சமையல்காரன் வதக்கிப் பக்குவம் செய்திருந்த கொக்கைக்கொண்டுவந்து வைத்தான். பிரபு கொக்கைப் பார்த்தார்; ஒரு துடையைக் காணவில்லை. உடனே, "எங்கே மற்றொரு துடையைக் காணோம்?" என்று சமையல்காரனைப் பார்த்துக் கேட்டார். சமையல்காரன் "மற்றொரு துடையா? கொக்குக்கு ஒரு துடையும் ஒரு காலும்தானே உண்டு எஜமான்?" என்று விடையளித்தான். பிரபுவுக்குக் கோபம் வந்துவிட்டது. "என்னடா பிதற்றுகிறாய்? நான் கொக்கைப் பார்த்ததில்லை என்று நினைத்தாயா?" என்று அதட்டினார். சமையல்காரனும் கொஞ்சம்கூடத் தயங்காமல், "நான் உண்மையைத்தான் சொல்லுகிறேன். வேண்டுமென்றால் நாளைக் காலையிலேயே நான் கொக்கைக் காண்பிக்கிறேன். அப்புறம் அதற்கு எத்தனை கால்கள் என்பதை அறிந்துகொள்வீர்கள்" என்று பதில் சொன்னான். பிரபுவும் ஒப்புக்கொண்டார்; சமையல்காரன் சொன்னது உண்மையாக இல்லாவிட்டால், கடுமையான தண்டனை கிடைக்கும் என்றும் பயமுறுத்தினான், அப்புறம் எல்லோரும் கொக்கு உட்பட எல்லாவற்றையும் சாப்பிட்டுவிட்டு எழுந்தார்கள்.

மறுநாள் விடிந்தது. பிரபுவும் சமையல்காரனும் ஆளுக்கொரு குதிரையில் ஏறிக்கொண்டு, காட்டுப்புறத்தில் வெகுதூரம் சென்றார்கள். ஓரிடத்தில் பன்னிரண்டு கொக்குகள் நின்று கொண்டிருந்தன. தூங்கும்போது அவை ஒற்றைக் காலில் நிற்பது வழக்கம் அல்லவா? அந்தப் பன்னிரண்டும் அப்பொழுது தூங்கிக்கொண்டிருந்ததால், ஒரு காலை ஊன்றியும், மற்றொரு காலை வெளிக்குத் தெரியாமல் மடக்கியும் நின்றுகொண்டிருந்தன. சிச்சிபோ, பிரபுவைப் பார்த்து, "பாருங்கள் எஜமான்" என்றான். உடனே பிரபு "பார். இப்போது அவற்றிற்கு இரண்டு கால்கள் இருப்பதைக் காட்டுகிறேன்" என்று சொல்லிவிட்டு. கொக்குகளின் பக்கமாகப் போய் "ஹோ, ஹோ" என்று உரக்கக் கத்தினான். அவ்வளவுதான். கொக்குகள் யாவும் தம் இரண்டு கால்களையும் ஊன்றிக்கொண்டு ஓட்டம் பிடித்தன. "இப்பொழுது என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார் பிரபு. அதற்குச் சமையல்காரன் சொன்ன பதில்:

"எஜமான்! நீங்கள் இப்பொழுது 'ஹோ, ஹோ' என்று கத்தியது மாதிரி, நேற்றிரவு சாப்பிடும்போதும் கத்தியிருந்தால், அந்தக் கொக்கு தன் மற்றொரு காலையும் வெளியே நீட்டியிருக்கும். நீங்கள் நேற்று கத்தாமல் விட்டுவிட்டீர்களே!"

— சக்தி

வி. கல்யாணராமன்—எழும்பூர்.

"இலக்கியத்தில் காதல்" எழுதும் காரை – முத்துப்புலவர், 1. யார்? 2. எந்த ஊர்? 3. சொந்தப் பெயர் என்ன?

1. திராவிடன், **2.** காரைக்குடி, **3.** ஏ. எல். எஸ். முத்தையா.

* * *

தி. மு. க. தலைவருக்கும் தமிழரசுக் கழகத் தலைவருக்கும் என்ன வித்தியாசம்?

தி. மு. க. தலைவர், படித்தவர், பக்குவப்பட்டவர், பலராலும் மதிக்கப் படுபவர்.

* * *

கே. எஸ். ஆர், சேலம்.

புத்திசாலிக்கும் மூடனுக்கும் என்ன வேற்றுமை?

"மூடனுக்கு நாக்கு வாயில் இருக்கிறது; புத்திசாலியின் நாக்கு இருதயத்தில் இருக்கிறது" என்று ஒரு பழமொழி உண்டு.

* * *

வி. பி. அருணசலம்—தேவகோட்டை.

கண்ணதாசன் நாட்டுக் கோட்டைச் செட்டியார் ஆயிற்றே; அவருக்கு ஏன் இந்தக் கெடுமதி? முன்னேற்றக் கழகத்தில் ஏன் சேர்ந்தார்?

செட்டியாராக வாழ்ந்து பார்த்துவிட்டுத்தான் சேர்ந்தார்!

* * *

ஏ. பி. அங்கதன்—விரிஞ்சியூர்.

மன்மதன் எப்படி இருப்பான்?

அட, உம்மைப்போல் இருப்பான் என்று நினைத்துக் கொள்ளுமே!

* * *

செந்தாமரை என்னும் படத்துக்கு யார் வசனம் எழுதுகிறார்கள்?

தோழர் அரங்கண்ணல்.

* * *

ஓய் தென்றலாரே! நீர் ஏன் உணர்ச்சி வசப்பட்டு விடுகிறீர்?

என்ன செய்வது! நண்பர்கள் கோபத்தைத் தூண்டி விடுகிறார்கள். பிறகு அவர்களும் வருந்துகிறார்கள்; நானும் வருந்துகிறேன்.

* * *

எஸ். ஆர். ராமசாமி—குனியமுத்தூர்.

வயதுக்கு மேற்பட்ட பெண்ணை மணந்து கொள்வது நல்லதா?

நல்லதுதான். அவர்கள் நான் அதிகம் அன்பு செலுத்தத் தெரிந்தவர்கள்.

இதோ! தலைசிறந்த படங்கள்!

திருச்சி தஞ்சாவூருக்கு நாங்கள் விநியோகிக்கிறோம்!

நேஷனல் புரொடக்ஷன்ஸ்:

அம்மையப்பன்

மதருஸ் பிக்சர்ஸ்:

செந்தாமரை

வி. சி. சுப்பராமனின்: **மேனகா**

பத்மினி பிக்சர்ஸ்: **முதல் தேதி**

மற்றும்,

கல்யாணம்பண்ணியும் பிரமசாரி, சொர்க்கவாசல்

— பணம், ஆசைமகன் —

மற்றும் பலபடங்கள்!

ராணி பிக்சர்ஸ்

திருச்சி.

இவனன்றோ கவிஞன்

வே. கபிலன்

உறையூரைத் தலைநகராகக் கொண்டு விளங்குகிறுன் கிள்ளி என்போன். அவனது ஆட்சியில் நீர்வளம், நிலவளம், கொடைவளம், இன்ன பிறவும் செழித்து சிறப்புற்றுத் திகழ்ந்திருக்கின்றன. அத்தகைய வளமிக்க நாடுகளுள் புனல் நாடும் ஒன்ருக விளங்குகிறது. அதோடு மட்டுமல்லாமல், 'வாழி அவன் தான், வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி!' என்று சிலப்பதிகாரக் கருத்துரைக்கேற்றவாறு, அங்கு வாழ்கின்ற மக்கட்குத் தாயாக விளங்கும் காவேரி அன்னையைக்காண, ஊர்தியின்மீது கிள்ளி வருகிருன்.

பொன்னியாற்றில் நீராடச் செல்கிருள் ஒரு மங்கை. அவ்வேளையில் காவேரியில் நீர் மல்கி கரை புரண்டோடுகின்றது. அதனில் மகிழ்ச்சியோடு நீராடிவிட்டு வருகிருள்; வழியில் சோழ நாட்டுப் புலிக்கொடியோனைப் பார்க்கிருள். அவன் மார்பில் உள்ள பொன்னுரத்தைக் காண்கிருள். அவன் காலில் வீரக்கழல் மின்னுகிறது. அவனது இடையில் வெற்றி முழக்க மிட்ட வீரவாள் மின்னல்போல் 'பளிச் பளிச்'சென்று காட்சியளிக்கிறது. இவ்வித அணிகலனேடு அவ்வரசனின் அழகைக் கண்ட அணங்கு, தன்னை மறந்தாள். அவனிடத்தில் தன் உள்ளத்தையும் பறி கொடுத்தாள். அவனைப் பல முறை திரும்பிப் பார்த்தவாறு வீட்டை நோக்கி வருகிருள் 'நெய் குடத்தைப்பற்றி ஏறும் எறும்புகள்போல்' என்கின்ற பெரியாழ்வாரின் திரு மொழிக்கேற்றவாறு அவளின் அகத்தில் துன்பம் துளிர்விடுகிறது. அது முதல் அவன் உருவத்தை நினைத்தவாறே இருக்கிருள். அவளின் விரல்கள், வெண்மை மணலில் 'கிள்ளி கிள்ளி' என்று எழுதிக்கொண்டே இருக்கிறது. அவளின் வாயும், விஞடிக்கு விஞடி அவனைப்பற்றி புகழ்ந்து பாடத் தொடங்குகிறது. அன்றுதொட்டு தனிமையாக உலக்கை ஓச்சும் போது கிள்ளியைப்பற்றி பாடுபவளாஞள் பல நாள் கழிந்தன. ஒருநாள் மாற்றுப் பெண்ணேடு, மாற்றுலக்கை பிடிக்க எதிர் பாராத விதமாக நேரிடுகிறது. அவள் ஒரு குற்று குற்றிஞல் இவள் குற்றவேண்டும்; பின் அவள் குற்றுவாள்; இதுதான் ஊழுலக்கை என்பர். ஆஞல் இவ்விதமாக குற்றும்போது சோழனை நினைத்துப் பாடிஞல் அவளுக்குத் தெரிந்துவிடும். ஆதலால் நினைக்கவே மாட்டேன் என்று மனதில் உறுதி செய்து கொண்டு உலக்கையைப் பிடிக்கிருள்; அவளின் உள்ளமும், உரையும் தன் வசமில்லா நிலையில் துயறுருகிருள். என் செய்வதென புரியாமல் திகைக்கிருள். அவளின் வாய் அவனைப்பற்றிப் பாட ஆவலோடு காத்திருக்கிறது, வாயிலிருந்து சொல் கூட்டமாக புறப்படுகின்ற வேளையில் திடீரென உணர்ந்துகொள்கிருள்.

என்னே! என்னை அறியாமல் எழுகின்ற சொற்கள்? எவ்வளவோ மறைத்தும், பக்கத்திலுள்ளோரைக் காட்டினுலும் அந்தச் சோழனைப்பற்றி என் வாய் பாடாமல் இருக்கமாட்டேன் என்கிறதே! என்ருே ஒருநாள் பார்த்தோம்; இன்று அது என்னைப் பற்றி பிறர் தவருக எண்ணக் கூடிய அளவிற்கல்லவா சுட்டிக் காட்ட இருக்கிறது. பொன்னுர மாற்பிர் புனை கழற் காற் கிள்ளி' என்பன போலல்வா அவனது உருவம் ஓவியம் போன்று உள்ளத்தில் மறையா வண்ணம் அமைந்துவிட்டது?' என்றுதலைவி தன் நெஞ்சோடு கூறிக்கொள்கிருள்.

இத்தகைய சிறுமை உறவை புறத்தினைச் சார்பான பெண்பாற் கைக் கிளையில் எடுத்துக் காட்டுகின்ற, பண்பை பண்பொழுக்கத்தை என்னென்று புகழ்வது? இவனன்ருே கவிஞன்!

பொன்னுர மார்பிற் புனைகழற்காற்
கிள்ளிபேர்
உன்னேனென் ருலக்கை பற்றி
னேற்—கென்னே
மனனெடு வாயெல்லாம் மல்கு நீர்க்
கோழிப்
புனலுடன் பேரே வரும்.

—முத்தொள்ளயிரம்

எடுத்த எடுப்பிலேயே
எண்ணற்ற மக்களை
தன் வயமாக்கிவிட்ட
'தென்றல்'
வார ஏட்டுக்கு
சந்தாதாரராகவேண்டாமா?
ஆண்டுச் சந்தா ரூ. 6—0—0
6 மாத சந்தா ரூ. 3—0—0
'தென்றல்'
சென்னை—14.

சிரிப்புத்தான் வருகுதையா!

உலகமெல்லாம் சேர்ந்து, கட்டிக் கொண்டு அழவேண்டிய ஒரு துக்கமான செய்தி; மனித சமுதாயம், கவலைப் பெருங்கடலில் ஆழ்ந்து விடவேண்டிய பரிதாபமான செய்தி; அதாவது: "தமிழரசுக் கழகம் காங்கிரசை விட்டு வெளியேற முடிவு செய்து விட்டது" ஐயோ! என்ன பரிதாபம்! இனி காங்கிரஸ் அடியோடு கவிழ்ந்து விடுமே!! சிவஞானம் இல்லையென்றால் காங்கிரஸ் என்ன ஆவது! "இதுவரை, காங்கிரசின் 'உயிர் நாடி'யாக இருந்தேன். இப்போது விலகுகிறேன்!" என்று சிவஞானம் நினைக்கும் போது, காங்கிரஸ் செத்து விட்டது என்றுதானே காங்கிரஸ்கார்கள் நினைக்கவேண்டும்! ஆகவே, காங்கிரஸ்காரர்கள் அப்படியே கருதுமாறு வேண்டிக் கொள்கிறேன்!

* * *

ஐரோப்பாக் கண்டத்தில், அமெரிக்காக இருக்கிறது. அமெரிக்காவுக்குள் பிரான்ஸ் நாடு இருக்கிறது. பிரான்சுக்கு பத்தாவது மைலில் இந்தியா இருக்கிறது. இத்தாலியில் உள்ளவர்கள் பேசுவது இந்தி மொழி. ரஷ்யாவில் ஆட்சி செய்பவர் லின்லித்கோ பிரபு; செஞ்சீனுவில் பூமியெல்லாம் செக்கச்செவேல் என்று பசுமையாக இருக்கிறது. ஜெர்மனி என்பது பூமத்தியரேகைக்கு மற்றொரு பெயர்; இந்தியா என்பது வங்காளக் குடாக்கடலில் அமிழ்ந்து போன ஒரு தீவு. மைல் கல் சதுரமாக இருப்பதற்குத்தான் சதுர மைல் என்று பெயர். சிலப்பதிகாரம் பாடியவன் ஔரங்கசீப். கண்ணகி என்பவள் விக்டோரியா மகாராணியின் கொள்ளுப்பாட்டி மாதவி என்பவள் மாதவன் என்பவனின் தங்கச்சி. சிலம்பு என்பது 'குழம்பு' என்பதன் 'திரிபு' 'தலையைக் கொடுப்போம்' என்ருல் "கிருப்பு" வெட்டிக் கொள்ளுவோம்" என்று அர்த்தம்— இப்படியெல்லாம் அருமையான உண்மைகளை அழகழகாகப் பேச இனி காங்கிரஸில் ஆள் இல்லை. காரணம் தமிழரசுக் கழகமும் அதன் தலைவரும் காங்கிஸிலிருந்து விலக முடிவு செய்தாகி விட்டது!

* * *

இனி 'செங்கோலை'த் தூக்கிக் கொண்டு, யாராவது சிம்மாசனம் கொடுப்பார்களா என்று பார்ப்போம்! நண்பரே! அருமை சிவஞானம் அவர்களே! வாருங்கள்! நானும் உங்களோடு சேர்ந்து எங்காவது–குறைந்த பட்சம் ஒரு ஓட்டை சிம்மாசனமாவது கிடைக்குமா என்று தேடுகிறேன். உண்மையில் உங்களை நினைக்கும்போது எனக்கு ரொம்ப அழுகை அழுகையாக வருகிறது! நீங்கள் எவ்வளவு நல்லவர்! சிறையிலே சிப்பி ஏந்தியிருக்கிறீர்கள். சொந்தக் கையாலேயே 'கம்போஸ்' பண்ணி புத்தகம் போடுகிறீர்கள். உங்களைப் போய், காங்கிரஸிலிருந்து துரத்துகிறுரே, பொல்லாத காமராசர்! உங்களுக்கும் இவ்வளவு 'சீக்கிரம்' கோபம் வந்திருக்க வேண்டாம். இன்னும் கொஞ்ச நாள், காமராசரின் கால்களைக் கெட்டியாக பிடித்துக் கொண்டு கெஞ்சிப் பார்த்திருக்கலாம். ஏனென்ருல், வெளியிலிருக்கிற 'வகுப்பு வாத'ப் பயல்களுக்கு எக்கச் சக்கமான கூட்டம் இருக்கிறது; நமக்கு அதில் பாருங்கள்! இனி நாம் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நம்முடைய கொடி—அதுதான் வில், அம்பு, கயல்—இன்னும் 'பாபுலர்' ஆகவில்லையல்லவா! "அதற்காக என்ன! நம்மிடம் பணமா இல்லை! பார்த்து விடுவோம் ஒரு கை!' என்கிறீர்களா! சபாஷ்! உண்மையில் நீங்கள்தான் மரத்தமிழன்!

* * *

இன்னொரு திடுக்கிடும் செய்தி! அதி பயங்கரமான செய்தி! உணர்ச்சி ஊட்டும் செய்தி! மிகுந்த பரபரப்பான செய்தி! தினப் பத்திரிகைகள் 'ஸ்பெஷல்' இதழ்போட வேண்டிய செய்தி! உலகம் நடுங்க வேண்டிய செய்தி! அதாவது, "தமிழரசுக் கழகம், தி. கொ. போராட்டத்தில் இறங்குவதற்கு முதல் தளபதியை நியமித்து விட்டது!" இனி பட்டம் தாணுபிள்ளை குளோஸ்! தி.மு.க. ஆள் பலத்தோடல்லவா, அந்தப் போராட்டத்தில் இறங்குகிறது! எங்கள் தமிழரசுக் கழகம் அப்படி இல்லை, முதல் தளபதியே கடைசி தளபதியாகவும் ஆக்கி, பின்னுல் ஆட்கள் அனுப்புவதற்கு விரும்பாமல்—காரணம் ஆட்கள் இல்லாதுதான் என்று யாரும் கருதவேண்டாம் — தனியாக அவரையே அனுப்பி, அவர்கையிலேயே ஒரு கொடியைக் கொடுத்து, அவரையே கோஷம் போடச் சொல்லி பெரிய புரட்சி நடத்தப் போகிறது! முடியுமா தி. மு. க. விஞல்! சேச்சே! எப்படி முடியும்! அதில்தான் நான் நீ என்று முந்துகிருர்களே!

* * *

ஷை போராட்டத்தில் தோழர் விநாயகம் எம். எல். ஏ. யும் கலந்து கொள்ளும்படி நேரும் என்று ஒரு 'படார்' செய்தி வருகிறது. எனக்கு இதில்தான் உண்மையில் சந்தோஷம். ஆனுல் தோழர் ம. பொ. சி. அவர்களுக்கு ஒரு வார்த்தை. விநாயகத்தை போராட்டத்திற்கு அனுப்பும் போது, திருவாங்கூர் போகும் ரயிலில் ஜாக்கிரதையாகப் பார்த்து அனுப்பிவிடவும் ஏனென்ருல், அவர் "திருக்குறள், மூன்று அடி" என்று பேசியவர். திருவாங்கூர், கல்கத்தாவுக்குப் பக்கத்தில் இருக்கிறது என்று, 'கல்கத்தா எக்ஸ்பிர'ஸில் ஏறி விடப் போகிருர்!

* * *

காமராசர் குடியேற்றம் தேர்தலில் ஜெயித்து, தோழர் கம்யூனிஸ்ட் கோதண்டராமன் தோற்றுவிட்டதால், கம்யூனிஸ்ட் நண்பர்கள் ஒரு தீவிரமான முடிவுக்கு வந்துள்ளார்களாம். அதாவது சட்டசபை கூட்டத்தில் தோழர் கோதண்டராமன் கலந்து கொள்ள வழி இல்லை ஆகையால்; குறைந்த பட்சம் அதன் வாசலிலாவது, கூடடம் நடக்கும் நாட்களில், தோழர் கோதண்டராமனை நிறுத்திவைப்பது என்று! இது மிக உயர்ந்த யோசனையாக எனக்குப்படுகிறது. ஆனுல், இந்த யோசனைக்கு ஒரு திருத்தம் கொண்டு வருகிறேன். அதாவது "நிறுத்தி வைக்கும்போது, சும்மா நிறுத்தி வைக்காமல், கையில் ஒரு அழகான" நெருப்புப் பந்தம் இணைத்த கம்பி"யை (சுருக்கப் பெயர் 'தீவட்டி' என்பர் சிலர்) அவர் கையில் கொடுத்து பிடித்துக்கொள்ளச் சொல்லவேண்டும்" என்பதாக!

விற்பனையாகிறது

★

* சுவையான கதை!

* வளமான நடை!

* அழகான பதிப்பு!

* பயனுள்ள படைப்பு!

விலை ரூ. 1-0-0

★

தபால் செலவு தனி.

வியாபாரிகளுக்கு
25 சதவிகிதம் கமிஷன்

★

அருணோதயம்

சென்னை–14

இன்னும் ஒரு 'பெரிய' செய்தி இருக்கிறது. அண்ணுத்துரையைக் காமராசர் சந்தித்ததால், கவலைப்பட்ட தோழர் சா. குருசாமி, தானும் ஒரு பெரிய மனிதன்தான் என்றும் அதற்காக 'சர்ட்டிபிகேட்' வேண்டுமானுலும் காட்டுவதாகவும், தன் உயரம் ஐந்தடி எட்டங்குலம் என்றும், தன் கையிலுள்ள பேனுவில் அரைப்படி மை கொள்ளும் என்றும், ஆகவே தன்னையும் வந்து சந்திக்கவேண்டும் என்று தோழர் காமராசருக்கு ஒரு 'பெட்டிஷன்' போட்டிருக்கிருராம். இந்த செய்தியை அனுப்பியவர் கூவம் நதியில் ஓடிக்கொண்டிருக்கும் "பன்னீர்" என்பவர்.

வணங்காமுடி.

அமெரிக்க சனங்கள்!

ஆப்பிரகாம் லிங்கன், அமெரிக்க ஜனுதிபதி ஆனபோது, அவர் மாளிகைக்கு முன்பு ஐந்து லட்சம் மக்களுக்குமேல் கூடி ஆனந்தம் தெரிவித்தார்கள். மாடி வராண்டாவில் நின்று லிங்கன் மகிழ்ச்சி தெரிவித்தார். உடனே பக்கத்திலிருந்த நண்பர், லிங்கனிடம் சொன்னுர்: "இத்தனை மக்களும் உங்களை மனப்பூர்வமாக ஆதரிக்கிருர்கள்!" என்று! அதற்கு லிங்கன் சொன்னது இது: பைத்தியம் ஐயா நீர்! நாளைக்கு இதே இடத்தில் என்னைத் தூக்குப்போடு; இவ்வளவு சனங்களும் வந்து சந்தோஷ ஆரவாரம் செய்வார்கள்!"

Printed at Ponni Achakam, Madras-1. Editor & Publisher KANNADHASAN, 2, Shanmuga Mudali Street, Madras-14